بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 44

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

02 ரபீவுல் அவ்வல் 1441 ஹிஜ்ரி கமரி 31 அஹா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

31 அக்டோபர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنْ يُّرِدْ ثَوَابَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا ۚ وَمَنْ يُّرِدْ ثَوَابَ الْاٰخِرَةِ نُؤْتِهٖ مِنْهَا ۚ وَسَنَجْزِى الشّٰكِرِيْنَ

இவ்வுலகக் கூலியை விரும்புவோருக்கு, நாம் அதிலிருந்து அவருக்கு வழங்குவோம். மறுமையின் கூலியை விரும்புவோருக்கு, நாம் அவருக்கு அதிலிருந்து வழங்குவோம். நன்றி செலுத்துவோருக்கு, நிச்சயமாக நாம் நற்பலன் வழங்குவோம். (3:146)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இந்த முன்னேற்றம் அடைந்த காலத்தில் இஸ்லாத்தை ஆதரவற்ற நினையில் விட்டு விடவில்லை. மாறாக, அவன் இஸ்லாத்தை பாதுகாத்தான். மேலும் தன்னுடைய உண்மையான தூதர் (ஸல்) அவர்களின் வாக்குறுதியை உண்மை என நிரூபித்துக் காட்டினான். அன்னாரின் அருளுக்குரிய முன்னறிவிப்பின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தி விட்டான். மேலும் இந்த நூற்றாண்டில் ஒரு நபரை தோற்றுவித்தான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹூம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### இன்றைய காலத்தின் முன்னேற்றமும் இஸ்லாத்தின் ஓர் அற்புதமாகும்

இப்படிப்பட்ட குழப்பமான காலகட்டத்தில் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு முறை முஸ்லிம்களை ஒன்றுமற்றவர்களாக ஆக்குவது நடக்கக்கூடிய விஷயம்தான். ஆனால் அல்லாஹ்வில் வலுவான ஆற்றல் இஸ்லாத்தை பாதுகாத்துள்ளது. இஸ்லாத்தின் உண்மைக்கு இதுவும் ஓர் சான்றாகும். இன்றைய காலத்தின் முன்னேற்றமும் இஸ்லாத்தின் ஓர் அற்புதமாகும்.

பாருங்கள்! எதிரிகள் தங்களுடைய அனைத்து ஆற்றல்களையும் சக்திகளையும் எதுவரை என்றால் அவர்களுடைய உயிரையும் பொருளையும் இஸ்லாத்தை அழிப்பதற்காக செலவு செய்தார்கள். ஆனால் அல்லாஹ் தன்னுடைய இந்த வாக்குதிற்கேற்ப

اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَ اِنَّا لَهٗ لَحٰفِظُوْنَ

அதாவது இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம் (15:10). அதாவது இறைவன் இயல்பிலேயே வடிவமைக்கப்பட்ட வரைபடத்தை நினைவூட்டக் கூடியவனாக இருக்கின்றான். மேலும் அபாயகரமான காலகட்டத்தில் அவனைக் காப்பாற்றக் கூடியவனாக இருக்கின்றான். இஸ்லாத்தின் கப்பல் அபாயத்தில் சிக்கி விட்டது. பாதிரிமார்களின் தாக்குதல் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து மேலும் பலன் தரக்கூடிய வாக்குறுதிகளை கூறி எதுவரை என்றால் வெட்கங்கெட்ட பாலுணர்வை தூண்டக்கூடிய விஷயங்களை காண்பித்து மக்களுக்கு இஸ்லாத்தின் மீது தீய எண்ணத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி செய்யப்பட்டது. மறுபுறம் இஸ்லாமிய கொள்கைகளின் மீது அவப்பெயரை ஏற்படுத்தி வந்தார்கள். இஸ்திஹாரா தொழுகை தொழப்படுகிறது. புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் மழை பொழியச் செய்வதில் வெற்றி பெற்றுவிட்டால் எவ்வாறு இன்றைய நாட்களில் சில மக்கள் அமெரிக்கா போன்ற இடங்களில் அதற்கான முயற்சிகளை செய்து வருகின்றார்கள். அவ்வாறு செய்வதன் மூலம் (அதில் வெற்றி கண்டு விட்டால்) விதி மீறல் செய்யப்படுகிறது. நாம் எதையெல்லாம் கூறுவோம். எல்லா திசைகளிலிருந்தும் இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்படுகின்றது. மேலும் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு உச்சகட்ட எல்லை வரை முயற்சி செய்கின்றார்கள்.

ஆனால் மக்களின் திட்டங்களும் தந்திரங்களும் என்ன செய்ய முடியும்? இறைவன் சுயமே இந்த தாக்குதல்களிலிருந்து இஸ்லாத்தைக் காப்பாற்ற விரும்புகிறான். மேலும் இந்த முன்னேற்றம் அடைந்த காலத்தில் இஸ்லாத்தை ஆதரவற்ற நினையில் விட்டு விடவில்லை. மாறாக, அவன் இஸ்லாத்தைப் பாதுகாத்தான். மேலும் தன்னுடைய உண்மையான தூதர் (ஸல்) அவர்களின் வாக்குறுதியை உண்மை என நிரூபித்துக் காட்டினான். அன்னாரின் அருளுக்குரிய முன்னறிவிப்பின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தி விட்டான்.

மேலும் இந்த நூற்றாண்டில் ஒரு நபரை தோற்றுவித்தான். நான் மீண்டும் மீண்டும் இதைக் கூறுகின்றேன். அந்த நபர் உங்கள் மத்தியில் பேசிக் கொண்டிருக்கின்றவர்தான். அவர் உண்மைத்துவத்தின் ஆன்மாவை இஸ்லாத்தில் ஊதுவார். மறைந்துபோன உண்மைத்துவத்தை விண்ணிலிருந்து அவரே கொண்டு வருவார். மேலும் அதை மக்கள் வரை கொண்டு சேர்ப்பார். அவர் தப்பெண்ணங்கள் மற்றும் ஈமானிய பலவீனங்களையும் அப்புறப்படுத்த விரும்புவார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 84,85 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பத்ர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள். (செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஜல்ஸாவின் நோக்கம் ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேறுவதே ஆகும்**

**பைஅத்தின் நோக்கம் என்ன என்பதை நமக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டுவதற்காகவே இந்த ஜல்ஸா நடத்தப்படுகின்றது**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்தின் உரிமைகளை நிறைவேற்ற வேண்டுமென்றால் பிறகு இறைவணக்கத்தின் உரிமையை செலுத்த வேண்டியது வரும்; பிறகு ஈமான், நிச்சய உறுதி மற்றும் இறைஞானம் அதிகரிக்கும்போதுதான் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீதான அன்பும் அதிகரிக்கும்**

**மகிழ்ச்சிகரமான நிலை ஏற்படுவதற்கு இறையச்சத்தைப் பேணுவது அவசியமாகும்**

**இந்த மூன்று நாட்களையும் ஒரு பயிற்சி முகாமாக கருதுபவரே அறிவுள்ளவர் ஆவார்**

**எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது எண்ணிக்கையில் அதிகரிப்பதோ அல்லது மிஷன் ஹவுஸ் அல்லது சென்டர்களை உருவாக்குவது அல்லது பள்ளிவாசலைக் கட்டுவது ஆகியவை இதன் நோக்கங்களை முழுமை செய்யும்போதுதான் பயன் தரும்**

**பாகிஸ்தானில் இருந்த கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்று தமது வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் குறிப்பாக இந்த காரணத்திற்காகவே அவர்கள் முன்பை விட அதிகமாக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்ததன் உரிமையை செலுத்துவதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். தமது ஆன்மீக அறிவு மற்றும் நல்லொழுக்க நிலைமைகளை சிறந்ததாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்**

**அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் மீது உண்மையான அன்பு இருக்கும்போதுதான் தமது ஒவ்வொரு விஷயங்களிலும் அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் வழிகாட்டியாக ஆக்கிக் கொள்ள முடியும்**

**உலக விருப்பங்கள் முற்றிலும் விலகி விடுவதும், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் மீதான அன்பு மிகைத்து விடுவதும் சாதாரண விஷயமல்ல. இதற்கு மிகப்பெரிய முயற்சிகள் செய்வது அவசியமாகும்**

**ஆண்டு மாநாட்டின் நோக்கங்களை நிறைவேற்றுவது மேலும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அன்பில் அல்லாஹ்வின் உரிமைகள் மற்றும் அடியார்களின் உரிமைகளை செலுத்தியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஹாலந்து மாநாட்டுத் திடலில் 27 செப்டம்பர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **27 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று அல்லாஹ்வின் அருளால் ஹாலந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு தொடங்குகிறது. பல வருடங்களுக்குப் பிறகு எனக்கும் உங்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பை அல்லாஹ் வழங்கினான். பல வருடங்களாக அமீர் சாஹிப் ஜல்ஸாவுக்கு வருமாறு கூறி வருகிறார். ஆனால் மற்ற ஜமாஅத் பணிகளின் காரணமாக விருப்பம் இருந்தும் வர முடியவில்லை. எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் விருப்பம் என்னை இன்று இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வைத்துள்ளது.

கடந்த சில வருடங்களாக ஹாலந்து ஜமாஅத்தின் மக்கள் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது. மூன்றுக்கு ஒன்று அதிகமாகி உள்ளது. நிறைய பேர் பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்துள்ளனர். சில புதியவர்கள் ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றனர். எவ்வாறிருப்பினும் உலகின் மற்ற பகுதிகளின் ஜமாஅத் போன்று ஹாலந்து ஜமாஅத்தும் அதன் எண்ணிக்கை மற்றும் வசதி வாய்ப்பின் அடிப்படையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நூல்கள் போன்றவற்றின் வெளியீடுகளும் நல்ல முறையில் நடக்கிறது. புதிய சென்டர் மற்றும் மஸ்ஜிதும் கூட ஜமாஅத்திற்குக் கிடைத்துள்ளது. நாம் பார்த்ததில்லை. இந்த மஸ்ஜிதின் அழகு பற்றி கேள்விப்பட்டேன். நீங்கள் மிகச் சிறந்த பள்ளிவாயில் கட்டியதாக கேள்விப்பட்டேன். அடுத்த வாரம் அதன் திறப்பு விழாவும் நடக்கும் – இன்ஷா அல்லாஹ்.

அதாவது சம்பிரதாயமான திறப்பு விழா ஆகும். இப்போது அங்கு தொழுகை நடைபெற்றுக் கொண்டிருக்கும் என்று நம்புகிறேன். நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இந்த எண்ணிக்கை அதிகரித்தல், பள்ளிவாயில் கட்டுதல், சென்டர்கள் உருவாக்குதல் எப்போது பயன் தரும் என்றால் அதன் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். இங்கே வாழும் ஒவ்வொரு அஹ்மதியும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். அன்னாரைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது பைஅத்தின் கீழ் வந்ததன் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.

நான் கூறியது போன்று பல வருடங்களாக பல அஹ்மதிகள் ஹிஜ்ரத் செய்து வந்துள்ளார்கள். இதனால் ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்கள் ஏன் இடம்பெயர்ந்து வந்தார்கள்? காரணம் குறிப்பாக பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு மார்க்கச் சுதந்திரம் இல்லை. அஹ்மதிகளுக்கு மார்க்கத்தின் பெயரால் நெருக்கடி செய்யப்படுகிறது. அவர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

அவர்கள் காலத்தின் இமாமை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நம்பியதனால்தான் இவ்வாறு செய்யப்படுகிறது. நாம் அல்லாஹ்வின் பெயரைக் கூறவும் அவனை வணங்கவும் தடுக்கப்படக் காரணம் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரின் பைஅத்தில் ஏன் வந்தோம்? என்பதனால்தான் அவ்வாறு செய்கின்றனர். பள்ளிவாயில்

கட்டுவது ஒருபுறம் இருக்கட்டும். நமது மக்களின் தர்பிய்யத்திற்காக மாநாடு, இஜ்திமா நடத்தவும் கூட தடுக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் சொல்வதாயின், சட்டப்படி வீட்டில் கூட தொழ முடியாது. தியாகப் பெருநாளில் குர்பானி கொடுக்க முடியாது. சட்டம் அதற்கு அனுமதி தரவில்லை. இதனால் வழக்கு போடப்படுகிறது. காரணம் பெயர் தாங்கி ஆலிம்களின் குழப்பத்தின் விளைவாகும். இந்நிலையில் நிறைய அஹ்மதிகள் இடம்பெயர்ந்து மார்க்கச் சுதந்திரம் உள்ள மேற்கத்திய நாட்டிற்குச் சென்று விடுகின்றனர். உங்களிலும் பலர் இடம்பெயர்ந்து வந்தவர்கள்தான். இங்கு மார்க்கச் சுதந்திரம் உள்ளது. பொருளாதார, வருவாய் நிலைகளிலும் தமது நிலைமைகளை மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் கட்டுப்பாடுகளிலிருந்து மீண்டு இங்கு வாழ்கிறார்கள். குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து வந்தவர்கள். அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்ததன் உரிமைகளை செலுத்த முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். உங்கள் ஆன்மீக, அறிவு, நல்லொழுக்க நிலைகளை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். நாங்கள் சுதந்திரமானவர்கள் என்பதில் மகிழ்ச்சி அடையக் கூடாது. நம்மை நமது மார்க்கத்தின்படி செயல்படுவதிலிருந்து தடுக்கக் கூடிய எந்த ஒரு கட்டுப்பாடும் இங்கு இல்லை.

நமது செயல்கள் இறை கட்டளைக்கேற்ப இல்லை எனில், நாம் நமக்குள் தூய மாற்றத்தை முன்னரை விட அதிகமாக உருவாக்கவில்லை எனில் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் அன்பின் வெளிப்பாடு முன்னரை விட அதிகமாக நம்மிடம் வெளிப்படவில்லை எனில் இந்த சுதந்திரத்தால் என்ன பயன்? இந்த மாநாட்டில் கலந்து கொள்வதில் என்ன பயன்? இந்தப் பள்ளிவாயிலைக் கட்டியதில் என்ன பயன்? உண்மையான பயன் நமக்கு இந்த சுதந்திரத்தால் எப்போது ஏற்படும் எனில் நாம் பைஅத்தின் உரிமையை நிறைவேற்றும்போதுதான் ஏற்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து உத்தரவு பெற்று மாநாட்டைத் தொடங்கியபோது கூறினார்கள்: காரணம், இந்த மாநாட்டால் நம்மிடம் தூய மாற்றங்கள் ஏற்படுவதற்காக கூறினார்கள். நாம் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை தருபவராக வேண்டும். அதற்கான சரியான புரிதிறன் நம்மிடம் உருவாக வேண்டும். நாம் அல்லாஹ், அவனது ரஸூலுடைய நேசத்தை உள்ளத்தில் உருவாக்க வேண்டும். நம்மிடம் ஆன்மீக, நல்லொழுக்க, அறிவு ரீதியான மேம்பாடு ஏற்பட வேண்டும். இதற்காக முடிந்த எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் மாநாட்டின் நோக்கங்களைப் பற்றி கூறுகிறார்கள்: தமது பைஅத்தின் கீழ் வந்தவர்களுக்கு போதனை செய்தவாறு கூறுகிறார்கள். எல்லா களங்கமற்றவர்களும் பைஅத்தில் இணைந்தவர்களும் இந்த எளியவனிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், அவர்களின் உள்ளத்தில் உலகியல் நேசம் குளிர்ந்து விட வேண்டும். கண்ணியத்திற்குரிய எஜமானர், ஒப்புக் கொள்ளப்பட்ட ரஸூல் (ஸல்) அவர்களுடைய அன்பு உள்ளத்தில் மேலோங்க வேண்டும். உங்களிடம் எத்தகைய ஒரு தனித்தன்மை உருவாக வேண்டும் என்றால் அதனால் மறுமை பயணம் சுமையாக ஆகாமல் இருக்க வேண்டும்.

(ஆஸ்மானீ ஃபைஸலா, ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 351)

இது ஒரு தெளிவான வழிகாட்டல் ஆகும். எனது பைஅத்தில் வந்து விட்டதால் வெறும் வாதம் மட்டும் செய்யாதீர்கள். மாறாக, களங்கமற்றவர்களில் இணைந்து விடுங்கள். மாசற்ற தன்மை, பற்று விசுவாசம் இவற்றில் முன்னேற்றம் எப்போது ஏற்படும் எனில் அல்லாஹ் மற்றும் அவனது ஒப்புக் கொள்ளப்பட்ட ரஸூல் (ஸல்) அவர்களுடைய நேசம் எல்லா நேசங்களை விட அதிகமாக இருக்க வேண்டும். எனவே பைஅத் நிபந்தனைகளில் அன்னார் ஒரு நிபந்தனையை இவ்வாறு வைத்துள்ளார்கள். காலல்லாஹி காலர் ரஸூல (அல்லாஹ் கூறியது ரஸூல் கூறியது) ஆகியவற்றை எல்லா நிலையிலும் மற்றவற்றை விட செயல்படத்தக்கதாகக் கருதுவேன்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 564)

பைஅத் செய்தவர் இவ்வாறு செய்கிறார். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் ஒவ்வொரு கூற்றையும் அப்போதுதான் வழிகாட்டுதலாக எடுக்க முடியும். ஆகவே இந்த மாநாடு நடத்துவதற்கான காரணம் மீண்டும் மீண்டும் நாம் இதனை நினைவு கூறுவதற்காகவே ஆகும். நமது பைஅத்தின் நோக்கம் என்ன? உலக ஆசை முற்றிலும் வெளியேற்றக் கூடிய இதுவும் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுடைய அன்பு மேலோங்குவதும் சாதாரண விஷயமல்ல. இதற்காக பெரிய முயற்சி செய்ய வேண்டியதுள்ளது. நாம் பைஅத் உடன்படிக்கை செய்தோம் எனில் முயற்சி செய்தோம் எனில் செய்யவும் வேண்டும். நாம் நமது உலகியல் பணி மற்றும் வணக்க வழிபாட்டிற்காக தியாகங்கள் செய்ய வேண்டியது வரும்.

உலகியல் பணிகளை அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்றுவதற்காக தியாகம் செய்ய வேண்டியது வரும். எந்த விஷயம் நம்மை இறை நெருக்கத்திலிருந்து தடுக்கிறதோ அதிலிருந்து தப்பிக்க வேண்டும். நமது வேலைகள், வியாபாரங்கள், அல்லாஹ்வுடைய உரிமைகளை செலுத்துவதிலிருந்து தடுக்கின்றன எனில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் இருப்பதற்கு தீமைகளிலிருந்து விலக வேண்டும் என்றும் அந்தத் தடைகளை அகற்ற வேண்டும் என்பதையும் உணர வேண்டும். அதுபோன்று நமது அகங்காரம், பெயர் தாங்கி உலகியல் கண்ணியங்கள் பிரபலங்கள் எமது சுயநலமான யோசனைகள், செயல்கள், அடியார்களுக்குரிய உரிமையைத் தருவதிலிருந்து தடுக்கின்றன எனில் அதுவும் அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்படாமையாகும். அடியார்களின் உரிமைகளை செலுத்துவதற்கும் அல்லாஹ்தான் கட்டளையிட்டுள்ளான். இதற்கு நாம் கட்டுப்படாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் வந்ததன் நோக்கத்தை நிறைவேற்ற முடியாது.

இதன் பக்கம் உங்களுக்கு அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள். அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளுதல் ஆகும். அன்னார் தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளுதல் எல்லா மனிதரை விடவும் அதிகமாக இருக்க வேண்டும். இறைவன் வரை நாம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் சென்றடைய முடியும். அன்னாரது கட்டளையின்படி செயல்பட்டவாறு அன்னாரது சுன்னத்தின்படி செல்வதால்தான் இறைவன் வரை செல்ல முடியும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் நல்ல முடிவை அடைவதற்கான வழியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ (3:32)

நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வுடன் அன்பு கொண்டீர்கள் எனில் என்னைப் பின்பற்றுங்கள். அப்போதுதான் அவர்களும் உங்களுடன் அன்பு கொள்வார்கள். அல்லாஹ்வும் அன்பு கொள்வான். இதற்கு நீங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும். அவர்களின் நடைமுறையின்படி செயல்பட வேண்டும். அவர்களின் கட்டளையைக் கடைபிடிக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனது அன்புக்குரியவர் ஆவதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதே ஒரே வழியாகும். உங்களை இறைவனுடன் இணைக்க வேறு வழியில்லை. மனிதன் தனித்த இணையற்ற இறைவனைத் தேட வேண்டும். இதுவே நோக்கமாகும். நாம் தனித்த இணையற்ற இறைவனைத் தேட வேண்டும். வேறு எந்த ஒன்றையும் அவனுக்கு எதிரில் நிறுத்தக் கூடாது.

அன்னார் கூறினார்கள்: இணை வைப்பு மற்றும் பித்அத்திலிருந்து விலக வேண்டும். மன எழுச்சிகளைப் பின்பற்றக் கூடாது. பாருங்கள். மீண்டும் கூறுகிறேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய உண்மையான வழியைத் தவிர எந்த வகையிலும் மனிதன் வெற்றி பெற முடியாது.

அன்னார் கூறுகிறார்கள்: நமது ஒரே வேதமாகிய திருக்குர்ஆன் அந்த ரஸூலின் மீது இறங்கியுள்ளது. அதனை பின்பற்றுவதன் மூலம் தான் நாம் இறைவனைப் பெற முடியும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 124,125)

மேலும் கூறினார்கள்: நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல், தொழுகை, நோன்பு போன்றவைகளுக்கு ஒரு வழிமுறை உள்ளது. அது தவிர இறைவனின் அருளை திறக்க வேறு சாவி இல்லை. ஆகவே இந்த பரக்கத்துகளைப் பெறுவதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்பும் அந்த அன்பின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கட்டளையின்படி நடப்பதும் அவசியமாகும். இது இல்லை எனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் பைஅத் செய்தது பயனற்றதாகும். நீங்கள் மாநாட்டில் ஒன்றுகூடுவதும் பயனற்றதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் இறைவனது அன்புக்குரியவரின் பேரன்பன் ஆவேன். நீங்கள் எனது பைஅத்தில் இருக்க விரும்பினால் நிச்சயமாக எனது அன்பிற்குரியவருடன் அன்பு கொள்ள வேண்டும்.

மேலும் கூறினார்கள்: நீங்கள் உங்களிடம் தனித்துவத்தை உருவாக்க வேண்டும் எனில் உலகியல் ஆசாபாசங்களில் இருந்து விலகி விடுங்கள். உங்கள் ஒவ்வொரு செயலும் அல்லாஹ் மற்றும் அவனது ஒப்புக் கொள்ளப்பட்ட ரஸூலின் கட்டளைக்கு ஏற்ப இருக்க வேண்டும். நிச்சயமாக உலகில் சம்பாதிப்பது வேலை செய்வது தடுக்கப்பட்டதல்ல. இறைவனே அதற்குக் கட்டளையிட்டுள்ளான். சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் இப்பணிகளைச் செய்தனர். அவர்களும் வியாபாரம் செய்தனர். வணிகம் செய்தனர். பெரும் பெரும் வியாபாரங்கள் அவர்களிடம் இருந்தன.

அவர்கள் இலட்சம், கோடிகளில் வியாபாரம் செய்தனர். கொடுக்கல் வாங்கல் செய்தனர். இலட்சங்கள் கோடிகளில் சொத்துக்களைக் கொண்டவர்களாக இருந்தனர். ஆனால் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுடைய அன்பு அவற்றின் மீது மிகைத்திருந்தது. அவர்கள் எப்போதும் நாங்கள் அல்லாஹ்வை வணங்குவதன் ஹக்கை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் கவலை இருந்தது. எங்களிடம் எமது அன்புக்குரியவர் கோபம் கொள்ளும் ஒரு செயல் நிகழ்ந்து விடக் கூடாது என்ற கவலை இருந்தது.

தற்போது நான் எனது குத்பாக்களில் சஹாபாக்களைப் பற்றி கூறி வருகிறேன். நிறைய சஹாபாக்களின் உதாரணங்கள் உள்ளன. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றிய தரம் எவ்வாறு இருந்தது? எத்தகைய அன்பு உணர்வு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக இருந்தது? அவர்களுக்கு இருந்த கவலை எல்லாம் எங்களின் ஒரு செயல் எமது அன்புக்குரியவரைக் கோபப்படுத்தும் விதத்தில் வெளிப்பட்டு விடக்கூடாதே என்பதாகும்.

எனவே நமது மனங்களிம் இவ்விஷயம் இருக்க வேண்டும். எல்லா உலகியல் பணிகள் இருக்கும் நிலையிலும் நாம் அல்லாஹ் அவனது ரஸூல் உடைய அன்பில் குறைவு ஏற்பட்டு விடக் கூடாது. மேலும் அதற்காக முடிந்தவரை அல்லாஹ் அவனது ரஸூலின் கட்டளையின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். தமது நிலைமைகளில் மேம்பாடு ஏற்படுத்த மாநாட்டின் ஆன்மீக சூழலிலிருந்து பயன் பெறுவதற்காக நமது செயலின் நிலையில் மேம்பாடு ஏற்படுத்துவதற்காக இந்த மூன்று நாட்களுக்கு ஒன்றுகூடிள்ளோம். இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் மூன்று நாட்கள் கூடுவதன் நோக்கம் என்னவென்று சிந்திக்க வேண்டும். இந்த ஆன்மீக சூழலிலிருந்து பயன் பெறுங்கள். உங்கள் செயல் நிலைகளில் மேம்பாடு ஏற்படுத்த முயலுங்கள். மேலும் உங்கள் தீமைகளை விட்டு விடுங்கள். இந்த நாட்களில் இறை வணக்கத்துடன் திக்ர் மற்றும் இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனம் செலுத்துங்கள். நம்மிடம் இந்த சிந்தனை இல்லை என்றால் நாம் மாநாட்டிற்கு வந்தது பயனற்றதாகும். அறிவுடைமையின் விருப்பம் இதுவேயாகும். இந்நாட்களை நாம் ஒரு பயிற்சி முகாம் போன்று கருத வேண்டும். நமது செயல் நிலையில் ஏற்பட்ட குறைபாடுகளை மனிதன் என்ற நிலையில் ஏற்பட்டவற்றை அகற்ற முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் மாநாட்டின் பயன்களைக் குறித்து கூறுகிறார்கள்: முடிந்தவரை எல்லா நண்பர்களுக்கும் அல்லாஹ்வுக்காக ஆன்மீக விஷயங்களைக் கேட்பதற்காக கூடுவதற்காக இந்நாட்களில் வர வேண்டும். இந்த ஜல்ஸாவில் உண்மைகளையும் ஞானங்களையும் கேட்க வேண்டும். ஈமான், திட உறுதி, இறை ஞானம் இவற்றில் முன்னேற இது அவசியமாகும்.

(ஆஸ்மானீ ஃபைஸிலா, ரூஹானீ கஸாயின் தொகுதி 4 பக்கம் 351,352)

ஆகவே மாநாட்டின் நோக்கம் ஈமான், திட உறுதியில் முன்னேற்றம் பெறுவதாகும். இறை ஞானத்தில் முன்னேறுவதாகும்.

அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: இது உலகியல் திருவிழா போன்று ஒரு திருவிழா அல்ல. ஒன்று கூடினோம். முழக்கமிட்டோம். நமது எண்ணிக்கையை வெளிக் காட்டினோம் என்பதல்ல. அது நோக்கமும் அல்ல. மாநாட்டிற்கு வரும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இளைஞரும், வயோதிகரும் இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அவர்களின் ஈமான், திட உறுதி, இறை ஞானம் அதிகரிக்க வேண்டும். அதன் மூலம் இறைவன் மற்றும் அவனது ரஸூல் மீது அன்பு அதிகரிக்க வேண்டும். ஈமான், யகீன் (திட உறுதி), மஃரிஃபத் (இறை ஞானம்) அதிகரித்தால் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் மீது அன்பு அதிகரிக்கும். அல்லாஹ்வின் தகுதி ரஸூல் (ஸல்) அவர்களுடைய தகுதியை நாம் புரிந்து கொள்ள முடியும். அல்லாஹ்வின் இருப்பு குறித்து நமக்கு திட உறுதி இல்லை எனில் பிறகு எவ்வாறு இறைஞானம் வளரும்? இறை ஞானம் வளர்ந்தால் தான் ஈமானில் உயர்வு ஏற்படும்.

ஆகவே நாம் ஒரு பொலிவுக்காக ஒன்றுகூடியிருக்கிறோம் என்று கருதக்கூடாது. அங்கிங்கு பேசிக் கழித்து விட்டுச் சென்று விடலாம் என்பதன்று. இவ்வாறு சிந்தனை இருந்தால் பிறகு ஜல்ஸாவுக்கு வந்தது பயனற்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நன்மைகளைச் செய்வது பற்றி கவனமூட்டியவாறு அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றுகின்ற நன்மைகளும் உள்ளன என்றும் அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுகின்ற நன்மைகளும் உள்ளன என்றும் எடுத்துரைக்கிறார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நன்மைகளை நீங்கள் இறைவனைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யுங்கள். அவனது திருப்தியைப் பெற வேண்டும். அவனது கட்டளையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு நற்கூலி கிடைத்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி. இதுவே உண்மையான அன்பின் தத்துவம் ஆகும். அல்லாஹ்வின் அன்பின் விருப்பம் நாம் அவனது கட்டளையின்படி செயல்பட வேண்டும் என்பதாகும். அதில் இறைவணக்கமும் அடங்கும். மேலும் இந்தக் கட்டளையை

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

நிறைவேற்றுவது இதற்காக இறைவன் கூலி தருவான் என்பதற்காக அன்று. நற்கூலி கிடைக்கும் என்பதற்காக அல்ல. இறைவன் எந்த நற்செயலுக்கும் கூலி தராமல் விடமாட்டான். கண்டிப்பாக கூலி தருகிறான். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 371,372)

உண்மையான ஈமானின் விருப்பம் அன்னார் முன்னர் கூறியதுபோன்று நன்மைகளில் நமக்கு ஏதாவது கிடைக்க வேண்டும் என்பதற்காக செய்யக் கூடாது. மாறாக நமது இறைவனின் கட்டளை நன்மை செய்ய வேண்டும் என்பதனால் அதனை செய்கிறேன் என்பதற்காக இருக்க வேண்டும். எண்ணங்களின் சலனங்கள் யூகங்கள் நடுவிலிருந்து அகன்று விட்டால் மட்டுமே ஈமான் முழுமை அடையும். கூலி கிடைக்குமா? கிடைக்காதா? என்ற கவலையில் இறங்காதீர்கள். இந்த சிந்தனை இருந்தால் ஈமான் முழுமையானதாகாது.

இறைவன் எந்த நன்மையையும் வீணாக்க மாட்டான் என்பது உண்மை எனில் இன்னல்லாஹ லாயுழீவு அஜ்ரல் முஹ்ஸினீன். அல்லாஹ் நற்செயல் செய்பவரின் கூலியை வீணாக்க மாட்டான் எனில் பிறகு நன்மை செய்பவர் கூலியைப் பற்றி சிந்திக்கக் கூடாது. உண்மையான நன்மை இதுவாகும். எந்த பேராசையும் இன்றி வெகுமதி வழங்குதல் ஆகும். இந்த விதியை முன்னிறுத்தி நாம் அடியார்களிடம் நல்ல முறையில் நடக்க வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமையைச் செலுத்த முயற்சி செய்ய வேண்டும். காரணம் அல்லாஹ், மற்றவருடன் நல்ல முறையில் நடக்குமாறு கட்டளையிட்டுள்ளான் என்பதால் ஆகும். ஒப்புக் கொள்ளப்பட்ட ரஸூலின் நடைமுறை என்பதால் ஆகும். பிறரது உரிமையை வழங்குங்கள் என்பது அன்னாரின் வழிகாட்டல் ஆகும்.

நல்லொழுக்கம் காட்டுங்கள் என்பது அன்னாரின் வழிகாட்டல் ஆகும். அடியாரிடமிருந்து பதிலுக்கு அதுபோன்றது கிடைத்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. நிச்சயமாக இறைவன் அதற்கு கூலி தருகிறான். நமது இறைவன் நம்மிடம் அவ்வாறு நடக்கிறான் எனில் நமது பொறுப்பை நாம் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும்? அதனை விட அதிகமாக நமது பொறுப்புகள் உள்ளன. அவனது திருப்திக்காக செய்யுமாறு கட்டளையிட்ட அவனது எல்லா கட்டளையின்படியும் செயல்படுங்கள். அவன் விலகுமாறு கட்டளையிட்ட எல்லா தீமைகளிலிருந்தும் விலகுங்கள். இந்த முன்னேற்றமடைந்த நாட்டில் நாம் நமது நிலைமைகளை சுதந்திரம் என்ற பெயரில் ஒவ்வொரு வீணான தீய செயல்களில் படுகின்ற சூழலில் கண்டிப்பாக வந்து விடாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

சில நேரங்களில் அழுக்குகள் நன்மைகள் உருவாவதைத் தடுக்கின்றன. நிலைமைகள் மேம்பட்டதும் மனிதன் கடந்த காலத்தை மறந்து விடுகிறான். நாம் கருதுகிறோம். இந்த உலகியல் பணியை நாம் செய்யா விட்டால் நமக்கு நஷ்டம் ஏற்படும். ஆனால் அல்லாஹ் கூறுகிறான்: வாழ்வாதாரம் தருபவன் நான் ஆவேன். ஆகவே இது பொதுவாக உலகியல்வாதிகளிடம் காணக் கிடைக்கிறது. அவர்கள் நஷ்டம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கவனம் செலுத்துகின்றனர். அல்லாஹ்வின் உரிமையைச் செலுத்துவதில்லை. இவ்விஷயத்தில் துரதிர்ஷ்டவசமாக நம்மவர்களும் அடங்குவர்.

தமது தொழுகைகளை தமது பணிகளுக்காக தியாகம் செய்கின்றனர். தொழுகை நேரம் வந்தது. மறுபுறம் பணி இருக்கிறது எனில் தொழுகையை விட்டு விட்டு சில நேரங்களில் சேர்த்து தொழுகின்றனர். சிலர் தொழ மறந்தும் விடுகின்றனர். ஆனால் உலகப் பணியை விடுவதில்லை. இதிலிருந்து நாம் விலக முயற்சி செய்ய வேண்டும். பிறகு தொழுகையை வேக வேகமாகத் தொழுகின்றனர். ஒரு கடமையை கழுத்தில் இருந்து இறக்கி வைக்க வேண்டும் என்பது போன்று செய்கின்றனர். நான் முன்னரும் கூறினேன். இது அல்லாஹ்வின் மீது அன்பு அல்ல. இவ்வுலகின் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு ஆகும். ஆகவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததின் உரிமையை நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ்வுக்கு இபாதத் செய்வதின் உரிமையை நிறைவேற்ற வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதன் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். இபாதத் அல்லாஹ்வின் அன்பின் தோய்ந்தவாறு செய்யப்பட வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 107)

அதுவே அசல் விஷயமாகும். அல்லாஹ்வின் இபாதத்தை கடமை என்று கருதி தலையில் போட்டுக் கொள்ளாதீர்கள். மாறாக கடமையில் சொந்த அன்பு இடம்பெற வேண்டும். அதில் தோய்ந்தவாறு இபாதத் செய்ய வேண்டும். தூய அன்புடன் இபாதத் செய்யப்பட்டால் பிறகு உலகியல் நோக்கங்கள் அழிந்து விடும். பிறகு உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதன் உண்மையான நோக்கம் வெளிப்படும். உலகியல் நோக்கம் முடிவுக்கு வந்து விட்டால் இறைவன் எத்தகைய வழிகளில் வாழ்வாதாரம் வழங்குவான் என்றால் மனிதன் அதனை கற்பனையும் கூட செய்திருக்க மாட்டான்.

அல்லாஹ் கூறுகிறான்: எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறாரோ அவருக்காக அல்லாஹ் ஏதாவது ஒரு வழியில் வாழ்வாதாரம் தருவான். அவன் எங்கிருந்து தருவான் எனில் அங்கிருந்து வருவது குறித்து அவன் கற்பனை கூட செய்திருக்க மாட்டான். (65:3,4)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மல்ஃபூஸாத்தில் கூறுகின்றார்கள்: நல்ல நிலைமைகள் தக்வாவினால் ஏற்படுகின்றன. பிறகு கூறுகின்றார்கள். இது முற்றிலும் உண்மையாகும். இறைவன் தனது அடியார்களை வீணாக்குவதில்லை. அவன் அவர்களை மற்றவரின் முன் கை நீட்டுவதிலிருந்து பாதுகாக்கிறான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது நம்பிக்கை என்னவெனில் ஒருவர் இறைவனுக்காக உண்மையான இறையச்சம் உள்ளவராக இருந்தால் அவரது இருப்பிடம் வரை ரஹ்மத்தை வழங்குகிறான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 245)

அவர் துரதிர்ஷ்டவசமாக இறைவனது அருளிலிருந்து விலக்கப்படுகிற காரியத்தை செய்துவிட்டால் ஒழிய அவரை பாதுகாக்கிறான்.

அன்னார் கூறுகிறார்கள்: மனிதன் எல்லா பிடி கயிறுகளையும் எரித்து விட வேண்டும். வஸீலாக்களை ஒழித்து விடுங்கள். இறை நேசம் என்ற பிடி கயிற்றை மட்டும் இருக்க விடுங்கள். ஒரேயொரு வஸீலா இருக்கட்டும். பிடி கயிறு இருக்கட்டும். அதன் மூலம் எல்லாவற்றையும் பெற முடியும். அது இறைநேசம் என்ற பிடி கயிறு ஆகும். உண்மை என்னவெனில், ஒருவர் இறைவனுக்காக ஆகி விட்டால் இறைவன் அவருக்காக ஆகி விடுகிறான்.

பிறகு கூறுகின்றார்கள்: இறைவனது பரக்கத்துகள் அவனது ரஹ்மத்துகளின் அறிகுறி வெளிப்படுபவராக ஆவி விடுங்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் வயதைப் பெறுவதன் நோக்கம் கீழ்த்தரமான உலக ஆசாபாசங்களைப் பெறுவதற்காக எனில் அவரது வயது என்ன பயன் தரப்போகிறது? எனக்கு வயது கிடைக்க வேண்டும் என்ற நோக்கம் இருக்கும் எனில் உலகியல் இன்பங்கள் கிடைக்க வேண்டும் என்றால் அதனால் என்ன பயன்? அதில் இறைவனது பங்கு சிறிதும் இல்லை. அவர் தனது வயதின் நோக்கமாக சுவையான உணவை உண்ணுதல், உறங்குதல், மனைவி

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டால் அல்லது மரணமடைந்தால், நிச்சயமாக அல்லாஹ்(விடமிருந்து உங்களுக்குக் கிடைக்கக்கூடிய) மன்னிப்பும், அருளும் அவர்கள் சேர்த்து வைக்கும் பொருள்களை விட மிகச் சிறந்ததாகும். (3:158)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

மக்கள், நல்ல வீடு பெரிதாக கட்டுதல், நல்ல தோட்டங்கள் இவற்றிலேயே முடித்துக் கொள்கிறார். இவர் தமது வயிற்றின் அடிமை ஆவார். அத்தகையவர் அல்லாஹ்வின் அடியார் அல்ல. அவனுக்கு இபாதத் செய்பவரல்ல. அவரை அடியார் என்று கூறவே முடியாது. மாறாக அவர் தமது சொந்த நோக்கங்களுக்கு இபாதத் செய்கிறார். அவருக்கு நோக்கம் எல்லாம் செல்வம் வேண்டும்; பொருள் வேண்டும்; வீடு வேண்டும்; கார் வேண்டும். முன்னர் குதிரைகள் வைத்திருந்தனர். எனவே குதிரையை உதாரணமாகக் கூறியுள்ளார்கள். இன்று கார்கள் வேண்டும். நல்ல வகை கார்கள் வேண்டும். இவை நோக்கமல்ல. இவர்களிலிருந்து பயன் பெறுவது – அல்லாஹ்வின் அருள்களைப் பயன்படுத்துவது கண்டிப்பாக அவசியமாகும். அது மட்டுமே நோக்கமாக இருக்கக் கூடாது.

அவர்கள் கூறினார்கள்: பிறகு அவர் அந்த பொருள்களின் அடிமையாவார். அதற்கு இபாதத் செய்கிறார். அத்தகைய மனிதரை அல்லாஹ்வின் அடியார் என்றும் அவனுக்கு இபாதத் செய்பவர் என்றும் கூற இயலாது. அவர் தமது சொந்த நோக்கங்களை வணங்குகிறார்.

அவர்கள் கூறினார்கள்: அவர் தனது நோக்கமும், வேண்டுவதும், வணங்கும் பொருளாக மன கிளர்ச்சி மற்றும் மன இச்சைகளை ஆக்கி வைத்துள்ளார். அதுவே அவரது விருப்பமாகும். ஆனால் மனிதனது பிறப்பின் அடிப்படை நோக்கமாக தனது இபாதத்தையே வைத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ அதாவது நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளான். (51:57) எனவே தீர்ப்பு வழங்கி விட்டான். இறைவணக்கம் நோக்கமாக இருக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காகவே இந்த செயலகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவின்றி இதற்கு எதிரில் வேறு விருப்பங்களைக் கொள்ளுதல் என்று மாற்றமாக நடைபெறுகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 246,247)

ஆனால் நடப்பது என்ன? அவன் உலகில் விழுகிறான். வேறு நோக்கங்கள் உள்ளன. அல்லாஹ்வை வணங்குவதை விட்டு உலகியல் நோக்கம் அதிகமாகி விட்டது. ஆகவே இவை நம்மை கவலை கொள்ளச் செய்யும் விஷயங்களாகும். எவ்வாறு நாம் நமது வாழ்வின் நோக்கத்தைப் பெறுபவராக ஆவோம் என்று கவலைப்பட வேண்டும். இந்தக் கீழ்த்தர உலகைக் குறித்து கவலை கொள்ளாதீர்கள். நமது சிந்தனை உழைப்பு ஆகியவை உலகைப் பெறுவதாக மட்டுமே இருக்கக் கூடாது. நாம் நமது வாழ்வின் அசல் நோக்கத்தைப் பெற நமது எல்லா திறமைகளையும் பயன்படுத்த வேண்டும்.

இந்த நாட்டுக்கு வந்து நாம் அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்க முயன்றவாறு அவனது இபாதத்தின் உரிமையை நிறைவேற்றுபவர் ஆக வேண்டும். நமது விருப்பங்கள், நாட்டங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்ததற்கு மாற்றமாக இருக்க வேண்டாம். நாம் நம்மைப் படைத்தவனை கண்டறிந்தவாறு நமது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுபவராக வேண்டும். அதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பினான். அதனை நிறைவேற்றுபவர் ஆகுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அனுப்பப்பட்டதன் நோக்கம், ஈமானை உறுதிப்படுத்துவதாகும். அல்லாஹ்வின் இருப்பை மக்களிடம் நிரூபித்துக் காட்டுவதாகும். ஏனெனில் ஒவ்வொரு சமுதாயத்தின் ஈமானிய நிலையும் மிகவும் பலவீனமாகி விட்டது. மறுமை வாழ்வு என்பது கற்பனையாக கருதப்படுகிறது. மறுமை என்று மரணத்திற்குப் பிறகு ஒன்றுமே இல்லை என்று கருதப்படுகிறது. மனிதனின் செயல்நிலை தெரிவிக்கிறது. உலகம் மற்றும் உலகச் செயல்கள் மீது திட உறுதி உள்ளது. உலகக் காரணிகள் மீது இருக்கிற நம்பிக்கை, திட உறுதி இறைவன் மீதோ மறுமை உலகின் மீதோ இல்லை. நாவில் ஒன்றும் உள்ளத்தில் உலக நேசத்தின் மிகைப்பும் உள்ளது. நிச்சயமாக நாவில் அல்லாஹ்வின் பெயர் உள்ளது. ஆனால் உள்ளத்தில் உலக நேசம் மிகைத்துள்ளது. அந்த மிகைப்பின் வெளிப்பாடு அவர்களின் செயல்களில் தெரிகிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: யூதர்களிடம் இறை நேசம் குளிர்ந்தது. அப்போது மஸீஹ் வந்தார். அவர்களை மார்க்கத்தின் பக்கம் இறைவன் பக்கம் அழைக்க வந்தார். எனது காலத்தில் அதே நிலை உள்ளது. எனவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஈமான் மீண்டும் வரவும் உள்ளத்தில் இறையச்சம் உருவாகவும் அனுப்பப்பட்டுள்ளேன்.

(கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 291,293 அடிக்குறிப்பு)

எனவே இன்று நமது பணி அன்னாரின் பைஅத்தின் உரிமையைச் செலுத்தியவாறு நம்மிடம் அல்லாஹ்வின் நேசத்தை அதிகமாக்கிக் கொள்வதாகும். தவ்ஹீதை உள்ளத்தில் உறுதிப்படுத்துங்கள். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் நேசத்திற்கு எதிரில் உலகம் மற்றும் அதன் ஆசாபாசங்களை அழித்து விடுங்கள். இந்த தூய மாற்றத்துடன் நீங்கள் இந்த சமூகத்தையும் இறைவனுக்கு அருகில் கொண்டு வர முயலுங்கள். இன்று உலகம் இறை இருப்பை நம்ப மறுக்கிறது.

ஒவ்வொரு வருடமும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் இறைவனின் இருப்பை மறுப்பதில் செல்கிறார்கள். மார்க்கத்தை விட்டு விட்டு செல்கிறார்கள். கிறித்தவத்தில் சரி, முஸ்லிம்களிலும் சரி சில நேரங்களில் முஸ்லிம்களிலும் கூட இம்மக்கள் மறுக்கின்றார் எனில் அதே வேளையில் நாம் இறை நேசத்தை உள்ளத்தில் உருவாக்கியவாறு உலகையும் இறை இருப்பை குறித்து கவனமூட்ட வேண்டும். அப்போதுதான் நாம் இந்த ஜல்ஸாவின் நோக்கத்தை நிறைவேற்றியவர்கள் ஆவோம். அப்போதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் உரிமையை நிறைவேற்றியவராவோம். நமக்குள் இறை நேசத்தையும் ரஸூலின் நேசத்தையும் உருவாக்கியது போதுமானதன்று. அது மட்டுமே நமது பணியல்ல. அதனை விட அதிகமாக எமது பணி உள்ளது.

நமது சந்ததிகள், பிள்ளைகளின் உள்ளத்திலும் இறைவனின் நேசம் அவனது ரஸூலின் நேசம் உருவாக்குவதற்காக முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். அதுபோன்று நான் கூறியது போன்று உலகையும் இறைவனது இருப்பினை குறித்து கவனமூட்ட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் வந்ததும், அன்னாரது பிரச்சாரம் மற்றும் நோக்கத்தை மேம்படுத்துவதும் நமது கடமையும் ஆகும். அல்லாஹ் நமக்கு அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக.

இந்த ஜல்ஸாவின் நாட்களில் உங்கள் இபாதத்தின் தகுதியை உயர்த்தவும் அதில் நிலைத்து நிற்பதற்கும் நாம் முயற்சி செய்து வருவோமாக. அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் நேசத்தில் எப்போதும் வளர்ந்து கொண்டே செல்வோமாக. உலகியல் ரசனைகள் விருப்பங்கள் நம்மீது ஒருபோதும் ஆழ்த்தாமல் இருக்கட்டுமாக. இவை அனைத்தையும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அருள் இன்றி நடக்க முடியாது. எனவே அவனது அருளை ஈர்ப்பதற்காக நிறைய துஆ செய்வது அவசியமாகும். இதன் பக்கம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு அல்லாஹ் வாய்ப்பு வழங்குவானாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்தால் உங்களை எவராலும் வெல்ல முடியாது. அவன் உங்களுக்கு உதவி செய்வதை விட்டு விட்டால், அவனைத் தவிர உங்களுக்கு உதவி செய்பவன் எவன்? நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விடமே நம்பிக்கை கொள்ள வேண்டும். (3:161)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

# பெருநாள் குத்பா பேருரை

**இன்றைய பெருநாள் நமக்கு இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டக் கூடியாகவும் நினைவூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதாவது இந்த மாதத்தில் நாம் நன்மைகளின் எந்த இன்பங்களை சுவைத்தோமோ அதனை நாம் தொடரச் செய்ய வேண்டும்**

**நாம் இறையச்சத்தின்படி செயல்பட்டு நமது இறைவணக்கங்களில் நிலையாகவும், நிரந்தரமாகவும் இருப்பது அவசியமாகும்**

**அடியார்களின் கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு ஏழைகளை கவனத்தில் கொள்வது அவசியமாகும்**

**உறவினர்களுடன், நெருங்கியவர்களுடன் நல்ல முறையில் நடப்பது அவசியமாகும்**

**பிள்ளைகளுக்கும் அவர்களுக்கு பெருநாள் அன்று கிடைக்கும் பெருநாள் (ஈதீ) தொகையை இந்த ஏழை குழந்தைகளுக்காக ஏதாவது வழங்குமாறு பழக்கத்தை ஏற்படுத்துங்கள். இந்த பழக்கத்தை தற்போதே துவங்கினால் எதிர்காலத்தில் அவர்கள் பொதுத் தொண்டு செய்யக் கூடியவர்களாகவும், பொருள் தியாகம் செய்யக் கூடியவர்களாகவும், மனிதர்களிடம் அனுதாபம் காட்டக் கூடியவர்களாகவும் திகழ்வார்கள். அல்லாஹ்வின் அருள் மற்றும் உதவியினால் அவர்களின் வாழ்வின் கஷ்டங்களை அகற்றக் கூடியவர்களாகவும், நன்மையில் நிலைபெறக் கூடியவர்களாகவும் திகழ்வார்கள்**

**படைப்பினங்களின் மீது அனுதாபம் கொள்வது எப்பிப்பட்ட விஷயம் என்றால் அதனை மனிதன் விட்டு விட்டால் அதனை விட்டு தூரம் சென்றால் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவன் மிருகமாக ஆகிவிடுவான்**

**முஸ்லிம் சமுதாயத்திற்காகவும், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் வாழும் அஹ்மதிகளுக்காவும் மேலும் சுயநலமின்றி அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துகின்றவர்கள், வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள், ஜமாஅத்திற்கு தொண்டாற்றக் கூடியவர்கள், பொருள் தியாகம் செய்யக் கூடியவர்கள் ஆகியோருக்காக துஆ செய்யுமாறு ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

**மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது மற்றும் படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் ஞானமிக்க நோன்புப் பெருநாள் குத்பா பேருரை**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 16 ஜூன் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **16 ஆம் தேதி** ஆற்றிய **நோன்புப் பெருநாள் குத்பா பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்றைய பெருநாள் நமக்கு இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டக் கூடியாகவும் நினைவூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதாவது இந்த மாதத்தில் நாம் நன்மைகளின் எந்த இன்பங்களை சுவைத்தோமோ அதனை நாம் தொடரச் செய்ய வேண்டும். ரமலான் மாதத்தில் மக்கள் இறைவணக்கங்கள், தானதர்மங்கள், பொருள் தியாகங்கள், அடியார்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகளின் பக்கம் பொதுவாக கவனம் செலுத்துவார்கள். தற்போது இந்த விஷயங்களை கூட்டாக ஒரு குறிப்பிட்ட சூழலின் கீழ் செய்வதற்கான காலம் முடிந்து விட்டது. ஆனால் ஒரு நம்பிக்கையாளரின் பொறுப்பு மற்றும் தரம் என்னவென்றால் நன்மைகளை தொடர மட்டும் செய்யாமல் அதில் முன்னேறவும் வேண்டும்.

ஆக நேற்றுடன் இவ்வருடத்தின் கடமையான நோன்பின் நாட்கள் முடிவடைந்து விட்டன. அதில் நாம் பல்வேறு நஃபிலான இறைவணக்கங்களையும் செய்தோம். மேலும் ஏனைய இறைவணக்கம் மற்றும் அடியார்களின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் ஏற்பட்ட கவனத்தை நாம் தொடர வேண்டும். நஃபில்களின் பக்கம் கவனம் ஏற்பட்டிருந்தால் அதனை நாம் தொடர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். தொழுகைகளை முறையாக பேணுவதன் பக்கம் கவனம் ஏற்பட்டிருந்தால் அதனை தொடர்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தனது நஃப்ஸை கட்டுப்படுத்துவதன் பக்கம் கவனம் ஏற்பட்டிருந்தால் அதில் நிலைத்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். படைப்பினங்களின் மீது அனுதாபம் கொள்வதன் பக்கம் கவனம் ஏற்பட்டிருந்தால் அதில் தன்னை நிலைபெறச் செய்ய வேண்டும்.

சிலர் நாங்கள் தொழுகையை முறையாக பேணுவதற்கு முயற்சிகள் செய்தோம் என்று கூறுகின்றார்கள். ஆனால் அவர்கள் தமது ஆன்மாவை சோதித்துப் பார்த்தால் அது அவர்களின் ஆன்மாவின் ஏமாற்றுதல் ஆகும். அவர்கள் முயற்சியே செய்யவில்லை. அவர்கள் தொழுகையின் கடமையை உணர்வதில்லை என்பது தெளிவாகும். அவர்கள் கடமையை உணர்ந்திருந்தால் முயற்சிகள் ஒருபோதும் வீணாகாது. பொதுவாக ரமலான் மாதத்தில் நல்ல நிலைப்பாடு ஏற்பட்டு விடுகிறது. இது ஏன்? அன்றைய நாட்களில் உண்மையான முயற்சிகள் செய்யப்படுகின்றன. எழுவதற்கான எண்ணம் இருக்கும். பொதுவாக அசட்டையான மற்றும் சுற்றுச் சூழலை கண்டு கூட வெட்கப்படாதவர்களைத் தவிர ரமலானில் ஸஹர் வைப்பதற்காக ஒருவர் மற்றவரைப் பார்த்து எழுவார். சோம்பேறிகளும் கூட ஃபஜர் தொழுகையை குறித்த நேரத்தில் தொழுவதற்கு முயற்சி செய்வார்கள். இது உண்மையான முயற்சியாகும். இதனை விளைவுகளையும் நாம் பார்க்கின்றோம்.

ஆக இதை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது எந்த செயலில் எழுபது, எண்பது சதவிகிதம் முடிவுகள் வெளிவரவில்லை என்றால் அதற்காக ஒரு சரியான ஆர்வத்துடன் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்றே அதற்குப் பொருளாகும். ஆக இன்று நாம் எல்லாவித நன்மைகளையும் செய்வதற்கு உண்மையான முயற்சி செய்வோம் என உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும். நாம் முயற்சி செய்கின்றோம்

### திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு அவர்களிடையே அவர்களிலிருந்து ஒரு தூதரை அனுப்பி நிச்சயமாக அருள் புரிந்துள்ளான். அவர் அவனது அடையாளங்களை ஓதிக்காட்டுகிறார். மேலும் அவர்களைத் தூய்மைப்படுத்துகின்றார். அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். நிச்சயமாக அவர்கள் (இதற்கு) முன்னர் மிகத் தெளிவான வழிகேட்டில் இருந்தனர். (3:165)

Faizal Hameed Ilahi, Tittacherry

என்று தமது ஆன்மாவின் ஏமாற்றுதலின் கீழ் வந்துவிடக் கூடாது. இவ்வாறு நடைபெற்றால் நமது பெருநாள் உண்மையான பெருநாளாகும். அப்போதுதான் நமது இன்றைய மகிழ்ச்சி முழு வருடத்தின் மகிழ்ச்சியை விட மேலோங்கியிருக்கும். மேலும் இதுவே பெருநாளின் உண்மையான நோக்கமாகும். அவ்வாறு இல்லையென்றால் இன்று பிரத்யேகமாக தயாராவது, நல்ல உணவை உண்பது, நண்பர்களை சந்திப்பது ஏனைய நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடு செய்வது போன்றவை வீணானவையாகும்.

குறிப்பாக ஒரு மாதம் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நமது தர்பிய்யத்திற்காக சில அனுமதிக்கப்பட்ட காரியங்களிலிருந்தும் தவிர்ந்திருந்தோம். மகிழ்ச்சியுடன் தியாகம் செய்தவாறு நின்றோம். மேலும் இன்று அல்லாஹ்வின் கட்டளையுடன் இவ்வாறு ஒரு மாதத்தை கடந்தோம் என மகிழ்ச்சியை கொண்டாடுகின்றோம். மேலும் இதனுடன் இந்த மாதத்தின் தர்பிய்யத்தின் விளைவாக உருவான அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமைகள் மற்றும் படைப்பினங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் நாங்கள் இனியும் கவனம் செலுத்துவோம் என உறுதிமொழி எடுப்பதுதான் இன்றைய மகிழ்ச்சியின் பின்னால் இருக்கின்ற உண்மையான நோக்கம் ஆகும்.

ஆக நாம் வருடத்தில் ஒரு மாதம் அல்லாஹ்வின்கட்டளையின்படி நடந்து அவனது உரிமைகளை நிறைவேற்றுவதன் மூலம் நமது வாழ்வின் நோக்கம் நிறைவேறிவிடாது என்பதை நம்மில் ஒவ்வொருவரும் நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். அதேபோன்று ஒரு மாதம் மட்டும் படைப்பினங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்வதன் மூலம் நமது நோக்கம் நிறைவேறாது. மாறாக இந்த விஷயங்களை நிரந்தரமாக செய்யும்போதுதான் நமது நோக்கம் நிறைவேறும். மேலும் ரமலான் மூலமாக விலகிய சோம்பேறித்தனங்களிலிருந்து நிரந்தரமாக அகல வேண்டும். மேலும் எந்த நன்மைகளை செய்வதற்கான வாய்ப்புகள் கிடைத்தனவோ அதனை தொடர்ந்து செய்ய வேண்டும். இதன் மூலம் நாம் அல்லாஹ்வின் விருப்பத்தை பெறக் கூடியவர்களாக வேண்டும். மேலும் ஒவ்வொரு நாளும் நமக்கு பெருநாளாக ஆக வேண்டும். விடியற்கூடிய ஒவ்வொரு பொழுதும் அல்லாஹ்வின் விருப்பத்தை பெற்றுத் தரக்கூடியதாக விடிய வேண்டும்.

ஆக நாம் இவ்வாறு நடைபெற விரும்பினால் நாம் இறையச்சத்தின்படி செயல்பட்டு நமது இறைவணக்கங்களில் நிலையாகவும், நிரந்தரமாகவும் இருப்பது அவசியமாகும். அடியார்களின் கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தியவாறு ஏழைகளை கவனத்தில் கொள்வது அவசியமாகும். உறவினர்களுடன், நெருங்கியவர்களுடன் நல்ல முறையில் நடப்பது அவசியமாகும். தனது உள்ளத்தை அகம்பாவத்திலிருந்து தூய்மைப்படுத்துவது அவசியமாகும். அனுதாப உணர்வின் தரத்தை நிலைநாட்ட வேண்டும். நான் பெருநாளான இன்று அனுதாப உணர்வு மற்றும் அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றுதலின் பக்கம் குறிப்பாக கவனமூட்ட விரும்புகிறேன்.

அல்லாஹ்வின் அடியார்களின் உரிமைகைள நிறைவேற்றுவதும் ஓர் இறைவணக்கம் ஆகும். மேலும் இது இறைவணக்கத்தின் வட்டத்தில்தான் வருகிறது. நமக்கு இது பற்றிய ஞானத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ளார்கள். ஆக இன்று நாம் பெருநாளை கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். குறிப்பாக இந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் வசிக்கும் அஹ்மதிகள் நல்ல நிலையில் இருக்கும் அஹ்மதிகள் இந்த விஷயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது உலகில் எண்ணற்ற மக்கள் மிகவும் மோசமான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். எந்த அளவுக்கு என்றால் ஒரு கணிப்பின் அடிப்படையில் 815 மில்லியன் மக்கள் பசியுடன் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உணவு கிடைப்பதில்லை. ஒவ்வொரு நாளும் ஒன்பதில் ஒருவர் பசியுடன் உறங்குகிறார். உணவு உண்ணாமல் முழு நாளும் பட்டினியுடன் உறங்குகிறார். மூன்றில் ஒருவர் குறிப்பாக சிறுவர்கள் உணவு கிடைக்காமல் தவிக்கிறார்கள். அல்லது சரியான உணவு அவர்களுக்கு கிடைப்பதில்லை. இங்கு கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கையும் என்னைப் பொறுத்தவரை சரியில்லை.

ஏனென்றால் இதை விட அதிகமான மக்கள் உணவில்லாமல் தவிக்கிறார்கள். தற்போது போரின் காரணமாக ஈராக், சிரியா, யமன் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் மக்கள் குறிப்பாக குழந்தைகள் உணவு மற்றும் மருத்துவம் கிடைக்காமல் தவிக்கின்றனர். இந்த எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே செல்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு சமூக வலைதளங்களில் ஒரு போட்டோ (நிழப்படம்) பரவியது. அதில் ஒரு மருத்தவர் ஒரு சிறுவனுக் உண்பதற்கு ரொட்டியை வழங்குகின்றார். அந்த சிறுவன் மருத்துவரிடம் எனக்கு பசியே ஏற்படாமல் இருப்பதற்கு மருந்து ஏதாவது உங்களிடம் உள்ளதா? எனக் கேட்டான். அதனைக் கேட்ட அந்த மருத்தவர் அழத் தொடங்கி விட்டார்.

அந்த நிழற்படம் உண்மையா? அல்லது பொய்யா? என்பது தெரியாது. ஆனால் பட்டினியால் உலகில் சிறுவர்களின் நிலை இவ்வாறுதான் உள்ளது. ஆனால் போர் விரும்பிகளுக்கு சிறுவர்களுக்கு என்ன நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது பற்றி கவலையில்லை. குழந்தைகள் தனது தாய் தந்தையர்களை விட்டு தடுக்கப்படுகின்றனர். தடுக்கப்படுவது மட்டுமல்லாமல் இதன் காரணமாக பசியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

ஆக இந்த நிலையில் நம்மில் வயிறு நிரம்ப சாப்பிடக் கூடியவர்களுக்கு இன்றைய பெருநாளில் நல்ல உணவை உண்ணக் கூடியவர்களுக்கு அந்த மக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற உணர்வு அதிகமாக உருவாக வேண்டும். உணவு விஷயத்தை விடுங்கள். உலகில் குடிப்பதற்கு தண்ணீர் கூட சரியாக கிடைப்பதில்லை. கிடைத்தாலும் எவ்வளவு மோசமானதாக இருக்கிறது என்றால் நம்மில் பலர் அதனை பார்க்கக்கூட விரும்ப மாட்டோம்.

அல்லாஹ் இதன் பக்கம் கவனமூட்டியவாறு மேலும் நம்பிக்கை கொண்டோரின் அடையாளத்தை எடுத்துக் கூறியவாறு திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்.

وَيُطْعِمُوْنَ الطَّعَامَ عَلٰى حُبِّهٖ مِسْكِيْنًا وَّ يَتِيْمًا وَّ اَسِيْرًا۔ اِنَّمَا نُطْعِمُكُمْ لِوَجْهِ اللّٰهِ لَا نُرِيْدُ مِنْكُمْ جَزَآءً وَّلَا شُكُوْرًا (76:9,10)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு மொழிபெயர்ப்பு செய்துள்ளார்கள். அதாவது இந்த வசனத்தின் பொருள்: உண்மையான நன்மை செய்பவர்களின் இயல்பு என்னவென்றால் அவர்கள் இறையன்பை பெறுவதற்காக தான் சாப்பிட விரும்புவதை ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், கைதிகளுக்கும் வழங்குவார்கள். மேலும் அவர்கள் இதனை நாங்கள் உங்கள் மீது கருணை காட்டியவாறு செய்யவில்லை. மாறாக, இறை விருப்பம் கிடைக்க வேண்டும். இது அவனுக்காக நாங்கள் செய்யும் சேவையாகும். இதற்கு பகரமாக நாங்கள் உங்களிடத்தில் எதுவும் வேண்டுவதில்லை. மேலும் நீங்கள் எங்களுக்கு நன்றியுள்ளவர்களாக திகழ வேண்டும் என நாங்கள் விரும்பவுமில்லை எனக் கூறுவார்கள்.

(இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் தொகுதி 10 பக்கம் 357)

அன்னார் இந்த விஷயத்தை தெளிவுபடுத்தி விட்டார்கள். அதாவது தனக்கு விருப்பமான பொருளை வழங்குவது நன்மையாகும். வீணான, மோசமான பொருளை வழங்குவது நன்மையாகாது எனக் கூறியுள்ளார்கள். ஆக விருப்பமான பொருளை வழங்குவது தன்னைசிறிது கஷ்டத்தில் ஆழ்த்திக் கொண்டு மற்றவர்களை கவனத்தில் கொள்வதுதான் உண்மையான நன்மையாகும். ஆக தியாகம் செய்து ஏழைகளை கவனத்தில் கொள்வது, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வது போன்றவை அல்லாஹ்வின் விருப்பத்தினனை பெறுவது மற்றும் அவனது சதக்காவாகும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் வழியில் கொல்லப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். மாறாக, அவர்கள் தங்கள் இறைவனிடம் உயிருள்ளவர். (மேலும்) அவர்கள் (ஆன்மீகமாக) உணவளிக்கப்படுகின்றனர். (3:170)

M.Y. Shahul Hameed, Melapalayam

பிறகு இந்த விஷயம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரும். மேலும் இது இறைவணக்கமாகவும் ஆகிவிடும். இவ்வாறு அல்லாஹ்வுக்காக செய்யப்படும் இந்த படைப்பின சேவை இறைவணக்கமாக ஆகி விடுகிறது. மக்களுக்கு ரமலானில் தத்தமது தகுதிக்கேற்ப தானதர்மம் செய்வதற்கான, உதவிகள் செய்வதற்கான எண்ணங்கள் உருவாகின்றன. இந்த எண்ணம் ஆண்டு முழுவதும் இருக்க வேண்டும். தற்காலிகமாக இருக்கக் கூடாது. இவ்வாறு முழு வருடமுட்ம இந்த எண்ணம் இருந்து இறைவனுக்காக ஏழைகளை கவனத்தில் கொண்டால் பிறகு ஒவ்வொரு நாளும் பெருநாளாக உருவெடுத்து மகிழ்ச்சியைத் தரும். உலகவாதிகள் உலக அரசுகள் மற்றும் அமைப்புகள் தனது திட்டங்களுக்கேற்ப ஏழை நாடுகளில் தனது வட்டத்தில் தனது சிந்தனைக்கேற்ப அவர்களுக்கு உதவி செய்வதற்காக அவர்களின் பட்டினியை அகற்றுவதற்காக உதவிகள் செய்கிறேதா அல்லது எந்த மக்கள் செய்கின்றனரோ அங்கு அவற்றில் 70,80 சதவிகிதம் தனது செலவுகளுக்காக திரும்ப எடுத்துக் கொள்கின்றனர்.

ஏனென்றால் அவர்கள் இறைவனுக்காக அந்த பணியை செய்வதில்லை. அல்லாஹ்வின் விருப்பத்தினை பெறுவதற்காக அவர்கள் அதனை செய்வதில்லை. அவர்களது அந்த செயல் அந்த மக்களை தனது பேருபகாரத்தின் கீழ் வைப்பதற்காக இருக்கிறது. ஆக இந்த பணி நம்பிக்கை கொண்டவர்களின் பணியாகும். இதனை இபாதத்தின் வடிவில் செய்கிறார்கள். உண்மையான மகிழ்ச்சிக்குரிய நாள் மற்றவர்களை கவனத்தில் கொள்ளும்போதுதான் கிடைக்கும். ஜமாஅத் அமைப்பின் மூலம் ஏழைநாடுகளில் அனாதைகளின் தேவைகள் மற்றும் அவர்களுக்கு உணவு, உடை மற்றும் கல்விக்கான உதவி ஆகியவை செய்து தருவதற்கான ஏற்பாடு உள்ளது. நல்ல நிலையில் உள்ளவர்கள் அவர்களை கவனத்தில் கொள்ள வேண்டும். மகிழ்ச்சிக்குரிய ஒவ்வொரு தருணத்திலும் ஏழைகளின் பங்கை வழங்க வேண்டும்.

அடுத்து நோயாளிகளுக்கு இலவச மருத்துவம் உள்ளது. அதற்காக ஜமாஅத் செலவுகளை செய்கிறது. தேவயுைள்ளவர்களுக்கு தண்ணீர் மற்றும் உணவு போன்றவற்றை வழங்குவதற்காக ஏற்பாடு ஜமாஅத்தில் உள்ளது. ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவிக்கான ஏற்பாடு உள்ளது. ஆக இதற்காக மக்கள் எங்கு நேரடியாக வழங்குகிறார்களோ, தேவையுடையவர்களுக்கு உதவுகிறார்களோ அங்கு ஜமாஅத் மூலமாக வழங்கப்படும் மாணவர்களுக்கான உதவி, நோயாளிகளுக்கான உதவி, அனாதைகள் நிதி போன்றவற்றிலும் தனது வசதிக்கேற்ப ஏதாவது வழங்க வேண்டும். இதனைப் போன்று கிளை அமைப்புகளும், ஜமாஅத்தின் கீழ் செயல்படும் வேறு சில அமைப்புகளும் செயல்படுகின்றன. சில அசோசியேஷன் உள்ளன. அதில் IAAAE என்ற பெயரில் நைஜீரியாவில் ஓர் அமைப்பு இருக்கிறது.

இது தண்ணீருக்கான ஏற்பாட்டைச் செய்கிறது. ஆப்ரிக்காவில் பல்வேறு நாடுகளில் இவர்கள் குழாய் அமைத்துக் கொடுக்கின்றனர். சோலார் பம்பு, ஹேண்ட் பம்பு போன்றவற்றை அமைத்துக் கொடுக்கின்றனர். அசுத்தமான தண்ணீர் அருந்தக் கூடியவர்களுக்கு சுத்தமான தண்ணீர் அவர்களது வீட்டிற்கு முன்பு கிடைக்கும்போது அவர்களது மகிழ்ச்சி காணக்கூடியதாக இருக்கிறது. நாம் நமது பிள்ளைகளுக்கு அவர்களுக்கு விருப்பமான விளையாட்டுப் பொருளையோ அல்ல ஆடையையோ வாங்கி கொடுக்கும்போது அவர்களது முகத்தில் ஏற்படும் மகிழ்ச்சியை விட பல மடங்கு அதிகமாக அவர்களது வீட்டின் கதவருகே சுத்தமான தண்ணீர் கிடைக்கும்போது அந்த ஏழை பிள்ளைகளின் முகத்தில் ஏற்படுகிறது.

இதனைப்போன்று Humaniyt First (மனிதம் முதலில்) பல்வேறு வகையான சேவைகளை செய்கின்றது. இதில் உணவிற்கான ஏற்பாடு, தண்ணீர், கல்வி, மருத்துவம் போன்றவையும், நில அதிர்வு மற்றும் புயல் போன்ற சூழலில் பெரிய அளவில் சேவைகளில் ஈடுபடுகிறது. Humanity First (மனிதம் முதலில்) அமைப்பிலும் நமது ஜமாஅத் உறுப்பினர்கள் மிகவும் ஆர்வமாக சேவை செய்கின்றனர். எந்த பணியை மற்றவர்கள் இலட்சத்தை செலவு செய்து செய்கின்றார்களோ அதனை நமது ஜமாஅத்தினர் ஆயிரங்களில் செய்து முடிக்கின்றனர். நமது தன்னார்வ தொண்டர்கள் அங்கு செல்கின்றனர். ஆக நமது ஜமாஅத்தின் ஒரு பகுதி பொருள் மூலமாகவும் உறுப்பினர்களின் ஆற்றல் மூலமும் தன்னார்வத்துடன் தனது இந்த சேவையை செய்கின்றது. மற்றவர்களும் இதில் பங்கெடுக்க வேண்டும். இந்த நல்ல திட்டத்தில் பங்கெடுக்காத பலர் உள்ளனர். அவர்களும் நான் ஏற்கனவே கூறியது போன்று தனது இந்த மகிழ்ச்சிக்குரிய தருணத்தில் அல்லாஹ்வின் விருப்பத்திற்காக இதில் பங்கெடுக்க வேண்டும்.

இதற்கான பழக்கம் ஏற்பட்ட பிறகு உங்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சியானது அந்த தற்காலிக மகிழ்ச்சியை விட பல மடங்கு அதிகமாக இருக்கும். இதனைப் போன்று பிள்ளைகளுக்கும் அவர்களுக்கு பெருநாள் அன்று கிடைக்கும் பெருநாள் (ஈதீ) தொகையை இந்த ஏழை குழந்தைகளுக்காக ஏதாவது வழங்குமாறு பழக்கத்தை ஏற்படுத்துங்கள். இந்த பழக்கத்தை தற்போதே துவங்கினால் எதிர்காலத்தில் அவர்கள் பொதுத் தொண்டு செய்யக் கூடியவர்களாகவும், பொருள் தியாகம் செய்யக் கூடியவர்களாகவும், மனிதர்களிடம் அனுதாபம் காட்டக் கூடியவர்களாகவும் திகழ்வார்களோ அங்கு அல்லாஹ்வின் அருள் மற்றும் உதவியினால் அவர்களின் வாழ்வின் கஷ்டங்களை அகற்றக் கூடியவர்களாகவும், நன்மையில் நிலைபெறக் கூடியவர்களாகவும் திகழ்வார்கள்.

ஆக இந்த பண்பானது அடுத்த தலைமுறையினரிடம் தொடர வேண்டும். இதுவே பெருநாளின் உண்மையான மகிழ்ச்சியாகும். நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அதாவது அடியார்களுக்குரிய கடமையை செலுத்துவது மற்றும் மற்றவர்களின் உணர்வுக்கு மதிப்பளிப்பது தொடர்பாக ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஷரீஅத்திற்கு இரண்டு பெரிய பகுதி மற்றும் பிரிவுகள் மட்டுமேயுள்ளது. மனிதனுக்கு அவற்றை பாதுகாப்பது அவசியமாகும். ஒன்று இறைவனுக்கு செலுத்த வேண்டிய கடமைகள். மற்றொன்று அடியார்களுக்கு செலுத்த வேண்டிய கடமைகள். இறைவனுக்கு செலுத்த வேண்டிய கடமை என்பது, அல்லாஹ்வின் மீது அன்பு கொள்வது, அவனுக்கு கட்டுப்படுவது, இறைவணக்கம், ஏகத்துவம், இறையிருப்பு மற்றும் அவனது பண்பில் வேறெவரையும் இணையாக்காமல் இருப்பது ஆகிய இவைகள் இறைவனுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகள் ஆகும். அதாவது அவனை வணங்க வேண்டும். அல்லாஹ்வுடன் நேசம் கொள்ள வேண்டும். அவனது ஏகத்துவத்தை ஏற்க வேண்டும். ஏற்க மட்டும் செய்யாமல் நமது ஒவ்வொரு செயல்களின் மூலம் அதனை வெளிப்படுத்த வேண்டும். அவனுக்கு எத்தனை பண்புகள் உள்ளனவோ அவற்றின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அதாவது அவனுக்கு இணை யாரும் இருக்க முடியாது என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அடுத்ததாக கூறுகிறார்கள்: அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள். அதாவது தனது சகோதரனுடன் அகம்பாவம், மோசடி, அநீதி போன்ற எவ்வித செயலும் செய்யக் கூடாது. நல்லொழுக்கத்தில் எவ்வித மாற்றமும் உண்டாகக் கூடாது.

அன்னார் கூறுகின்றார்கள்: கேட்பதற்கு இவை இரண்டு வரிகளாகத் தெரிகின்றன. ஆனால் செயல்படுத்துவதில் இவை மிகவும் கடினமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மாபெரும் கருணை மனிதன் மீது இருந்தால்தான் அவனால் இந்த இரண்டு பகுதியில் நிலைநிற்க முடியும். ஆக நாம் அல்லாஹ்வின் அருளை தேட வேண்டும். யாரும் இதிலிருந்து தடுக்கப்பட்டவராக இருக்கக் கூடாது.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்விடமிருந்து (தங்களுக்கு வழங்கப்பெற்று)ள்ள பெரும் அருட்கொடையிலும் (அவனது) அருளிலும், அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களின் கூலியினை வீணாக்குவதில்லை என்பதிலும் அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். (3:172)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

அன்னார் கூறுகின்றார்கள்: உலகில் நாம் எதனை பார்க்கின்றோம். ஒருவருக்கு கோபப்படும் ஆற்றல் அதிகமாக இருக்கிறது. அவருக்கு மிக விரைவாக கோபம் வந்து விடுகிறது. அவ்வாறு கோபமடையும்போது அவரது உள்ளமும் தூய்மையாக இருப்பதில்லை. அவனது நாவும் தூய்மையாக இருப்பதில்லை. உள்ளத்ததால் தனது சகோதரருக்கு எதிராக மோசமான திட்டங்களை தீட்டுகின்றார். மேலும் நாவினால் தீய சொற்களை பேசுகின்றார்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆக எவர் உண்மையான ஏகத்துவவாதியாக இருப்பாரோ அதன் பிறகு அவர் தன் ஒழுக்க நிலைபாட்டை சரி செய்ய இரவு பகலாக முயற்சி செய்ய வேண்டும். ஏகத்துவத்தில் நிலைபெற்ற பின்னர் ஒழுக்கத்தை மேம்படுத்துவது அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: பெரும்பாலார் தமது சகோதரர்கள் மீது சிறிதளவு கூட அனுதாபத்துடன் நடந்து கொள்ளாததை நான் பார்க்கின்றேன். தனது சகோதரர் பசியுடன் இருந்தால் அவரை மற்றவர் கவனத்தில் கொள்வதில்லை. அவருக்கு உதவி செய்வதற்கு தயாராகுவதில்லை. அல்லது அவர் வேறு ஏதாவது கஷ்டத்தில் இருந்தால் அவருக்கு தனது செல்வத்திலிருந்து சிறிதளவு கொடுப்பதில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹதீஸில் அண்டை வீட்டாரின் நலம் விசாரிப்பது, அவர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது தொடர்பாக கட்டளை வந்துள்ளது. எந்தஅளவுக்கு என்றால் நீங்கள் இறைச்சி சமைத்தீர்கள் என்றால் அவர்களுக்கு வழங்குவதற்காக குழம்பை அதிகமாக செய்யுங்கள் என கூறப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது தனது வயிறை மட்டுமே வளர்க்கிறார்கள். மற்றவர்களைப் பற்றி சிறிதும் கவலைப்படுவதில்லை. வீட்டின் அருகில் இருப்பவர் மட்டும் அண்டை வீட்டுக்காரர் ஆவார் எனக் கருதாதீர்கள். மாறாக உங்களது சகோதரரும் உங்கள் அண்டை வீட்டுக்காரர் ஆவார். அவர் ஒரு மைல் தூரம் இருந்தாலும் சரியே. ஆக எவ்வாறு அனுதாபம் கொள்வது, எவ்வாறு மற்றவர்களுககு உணவளிக்க முயற்சி செய்வது மற்றும் கவனம் கொள்வது போன்ற எண்ணங்கள உருவாகுவதே ஒரு நம்பிக்கையாளரின் தரமாகும்.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் இந்த விஷயங்களின் மீது எந்த அளவு கவனம் ஏற்பட்டுள்ளது என தன்னை ஆய்வு செய்ய வேண்டும். மேலும் எந்த அளவு தனது சகோதரர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொண்டுள்ளான்? என பார்க்க வேண்டும். அதன் மிகப்பெரிய எதிர்பார்ப்பு மனிதனின் பொறுப்பாகும்.

ஹஸீஹான ஹதீஸில் வருகிறது: மறுமை நாளில் இறைவன் நான் பசியுடன் இருந்தேன். நீ எனக்கு உணவளிக்கவில்லை. நான் தாகித்தவனாய் இருந்தேன். நீ எனக்கு தண்ணீர் கொடுக்கவில்லை. நான் நோயுற்றிருந்தேன். ஆனால் நீ என்னை நலம் விசாரிக்கவில்லை எனக் கேட்பான்.

யாரிடம் இந்த கேள்வியை கேட்பானோ அவர்கள், எங்கள் இறைவா! நீ எப்போது பசியுடன் இருந்தாய் நாங்கள் உணவளிப்பதற்கு. நீ எப்போது தாகத்துடன் இருந்தாய் நாங்கள் உனக்கு தண்ணீர் கொடுப்பதற்கு. நீ எப்போது நோயுற்றிருந்தாய் நாங்கள் நலம் விசாரிப்பதற்கு எனக் கேட்பார்கள். அதற்கு இறைவன், எனது இந்த அடியான் இந்த விஷயங்களின் தேவையுள்ளவனாக இருந்தான். ஆனால் நீங்கள் அவனுக்கு உதவி செய்யவில்லை. அவனுக்கு உதவுவது எனக்கு உதவுவதாகும். இதனைப் போன்று மற்றொரு பிரிவினரிடம் நீங்கள் எனக்கு உதவினீர்கள். நான் பசியுடன் இருந்தபோது எனக்கு உணவளித்தீர்கள். நான் தாகத்துடன் இருந்தபோது தண்ணீர் கொடுத்தீர்கள் என்று கூறுவான்.

அந்த பிரிவினர் எங்கள் இறைவா! நாங்கள் எப்போது அவ்வாறு நடந்தோம் என்று கேட்பார்கள். அதற்கு அல்லாஹ் கூறுவான்: நீங்கள் எனது அந்த அடியாருடன் அனுதாபத்துடன் நடந்து கொண்டீர்கள். அது என்னுடன் நடந்து கொண்டதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையில் இறைவனது படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது மிகப்பெரிய விஷயமாகும். மேலும் இறைவன் இதனை மிகவும் விரும்புகின்றான். அவன் அதனை தனது அனுதாபமாக கூறுகின்றான். இதனை விட மிகப்பெரிய விஷயம் என்ன இருக்க முடியும்.

அதாவது தனது அடியாருடன் கொள்ளும் அனுதாபத்தை, ஏழைகளுக்கு செய்யும் உதவியை தனது அனுதாபமாக அல்லாஹ் கூறுகின்றான். இது ஒருவர் அல்லாஹ்வின் மீது அனுதாபம் கொள்வது போன்றதாகும்.

ஓர் உதாரணம் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: உலகிலும் பொதுவாக இவ்வாறுதான் நடைபெறுகிறது. அதாவது ஒருவருடைய பணியாளன் அவருடைய நண்பர் வீட்டிற்கு செல்லும்போது அந்த நண்பர் அந்த பணியாளனுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லையென்றால் அந்த நபர் தனது நண்பர் மீது மகிழ்ச்சி கொள்வாரா? ஒரு எஜமானருடைய பணியாளர் அந்த எஜமானரின் நண்பரிடம் செல்லும்போது அந்த நபர் அந்த பணியாளருடன் நல்ல முறையில் பரிமாறவில்லையென்றால் பிறகு அந்த பணியாளரின் காரணமாக அந்த எஜமானர் தனது நண்பருடன் மகிழ்ச்சி கொள்ள மாட்டார். சில சமயம் மகிழ்வார் என்றும் சில சமயம் மகிழ்ச்சியடைய மாட்டார் எனவும் கூறப்படுகிறது. அந்த நண்பன் அவருக்கு எவ்வித துன்பமும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அந்த பணியாளருடன் நல்ல முறையில் பரிமாறுவது ஒருவகையில் அந்த எஜமானருடன் நல்ல முறையில் பரிமாறுவதாகும்.

இதைப் போன்றே இறைவனும் தனது படைப்பினங்களுடன் கடினமாக நடப்பதனை, அவர்களை கருத்தில் கொள்ளாமல் இருப்பதனை, அவர்களின் தேவையின் போது அவர்களுக்கு உதவி செய்யாமல் இருப்பதை விரும்பவுதில்லை. ஏனென்றால் அவனுக்கு அவனது படைப்பினங்களின் மீது அதிக அன்பு உள்ளது. ஆக எவர் இறைவனது படைப்பினங்களுடன் அனுதாபம் கொள்வாரோ அவர் தனது இறைவனை மகிழ்விக்கிறார்.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: நல்லொழுக்கமே அனைத்து முன்னேற்றத்தின் படி ஆகும். எனது சிந்தனையின்படி இதுவே அடியார்களுக்குரிய உரிமையின் பகுதியாகும். இதுவே இறைவனுக்குரிய பகுதியை வலுப்படுத்துகிறது. அனுதாபத்தின் பகுதியாகிய, அடியார்களுக்குரிய உரிமையின் பகுதியாகிய இது அல்லாஹ்வின் உரிமையினையும் உறுதிப்படுத்துகிறது. அல்லாஹ்வின் அடியார்களுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்தினீர்கள் என்றால் பிறகு அல்லாஹ்வுடனும் உறுதியான தொடர்பு ஏற்பட்டு விடும்.

அன்னார் கூறுகின்றார்கள்: யார் மனிதனுடன் நல்ல முறையில் நடந்து கொள்வாரோ இறைவன் அவனது ஈமானை வீணாக்கமாட்டான். மனிதன் இறைவிருப்பத்திற்காக ஒரு பணியை செய்தால் தனது பலவீனமான சகோதரருக்கு உதவினால் அதன் மூலம் அவருடைய கலப்பற்ற தன்மையினால் அவனுடைய ஈமான் உறுதியடையும். ஆனால் பகட்டுக்காக, காட்டுவதற்காக நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தினால் அப்படிப்பட்ட செயல் அல்லாஹ்விற்காக இருக்காது. அதில் கலப்பற்ற தன்மையும் இல்லாத காரணத்தால் அது எந்த பயனும் அளிக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆக தியாகங்களும், சந்தாக்களும் இறைவிருப்பத்தினை பெறுவதற்காக வழங்கப்பட வேண்டும். நமது வழக்கத்திற்கேற்ப ரமலானில்

## திருக்குர்ஆனிலிருந்து...

நிராகரிப்பவர்களை நாம் விட்டு வைப்பது அவர்களுக்கு நன்றென்று அவர்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நாம் அவர்களை விட்டு வைக்கின்றோம் (என்றால்) அதன் விளைவு அவர்கள் (தங்கள்) பாவங்களில் முன்னேறுவதேயாகும். அவர்களுக்கு இழிவுபடுத்தும் ஆக்கினை (விதிக்கப்பட்டு) உள்ளது. (3:179)

A.Basheer Ahmad, Melapalayam

துஆவிற்காக பட்டியல் தயார் செய்யப்படுகிறது. துஆ கிடைக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது என்பது சரிதான். ஆனால் பெயர் வெளியில் தெரிய வேண்டும் என்பதற்காக இருக்கக் கூடாது.

அன்னார் கூறுகின்றார்கள்: அவ்வாறு பார்த்தோம் என்றால் பலர் சத்திரம், விடுதி போன்றவற்றை கட்டுகின்றனர். அவர்களின் நோக்கம் புகழுக்காக இருக்கும். பயணிகளுக்காக சத்திரம், விடுதி போன்றவற்றை கட்டுகின்றனர். தங்குவதற்கு இடம் கட்டுகின்றனர். இலவசமாக தங்குவதற்கு ஏற்பாடு செய்து தருகின்றனர். அவர்களிடம் பணம் இருக்கும். தண்ணீர் போன்றவற்றையும் ஏற்பாடு செய்து தருவார்கள். அவர்களின் நோக்கம் என்னவாக இருக்கும்?

அன்னார் கூறுகின்றார்கள்: புகழுக்காக இருக்கும். இறைவனுக்காக இருக்காது.

நான் ஏற்கனவே கூறியது போன்று பெரும்பாலான வசதி படைத்த நாடுகள் ஏழை நாடுகளுக்கு தனது நோக்கத்திற்காகவே உதவி செய்கின்றன.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: மனிதன் இறைவனுக்காக ஒரு செயலை செய்தால் அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அல்லாஹ் அதனை வீணாக்க மாட்டான். அதற்குரிய கூலியை வழங்கி விடுவான்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் தஸ்கிரத்துல் அவ்லியாவில் படித்திருக்கிறேன். அதாவது ஒரு வலியுல்லாஹ் கூறுகிறார்: ஒரு முறை மழை பெய்து கொண்டிருந்தது. பல நாட்கள் அது தொடர்ந்து பெய்தது. அந்த நாளில் நான் ஒரு நெருப்பு வணங்கியை கண்டேன். அவர் மாடியில் குருவிகளுக்கு தானியம் போட்டுக் கொண்டிருந்தார். அவன் ஒரு காஃபிர் ஆவான். காஃபிர்களின் செயல்கள் வீணானவைதான் என நான் கருதினேன். அந்த வலியுல்லாஹ் அந்த நெருப்பு வணங்கியிடம் உனது செயல்கள் உமக்கு பயனளிக்குமா? என்று கேட்டார். அதற்கு அவன் கண்டிப்பாக என்று கூறினான்.

அந்த வலியுல்லாஹ் கூறுகின்றார்: நான் ஒரு முறை ஹஜ்ஜிற்கு சென்றபோது அந்த நெருப்பு வணங்கி தவாஃப் செய்து கொண்டிருந்தார். அவர் என்னை அடையாளம் கண்டு அந்த தானியங்களின் பலன் எனக்கு கிடைத்ததா? இல்லையா? என்று கேட்டார். அதாவது (பறவைகளுக்கு நான் இட்ட) அந்த தானியங்களே என்னை இஸ்லாம் வரை கொண்டு வந்துள்ளது என்றார்.

அந்த நெருப்பு வணங்கி அந்த நன்மையை உலக பலனுக்கு காரணமாக கருதவில்லை. மாறாக இந்த விஷயத்தில் அதாவது அவரது இந்த நன்மையானது அவரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கும், அல்லாஹ்வின் விருப்பத்தை பெறுவதற்கும் காரணியாக இருப்பதற்காகவும் அவர் மகிழ்ச்சியடைந்தார்.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு ஹதீஸில் வந்துள்ளது. அதாவது ஒரு சஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நான் அறிவீனத்தின் காலத்தில் மக்களுக்காக செலவு செய்து வந்தேன். செலவு செய்யக் கூடியவனாக இருந்தேன். சுயநலமின்றி செலவு செய்து வந்தேன். அதற்கான நற்கூலி எனக்கு கிடைக்குமா? எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த தானதர்மத்தின் விளைவாகதத்தான் நீர் முஸ்லிமானீர். அதன் கனியைத்தான் நீங்கள் சுவைக்கின்றீர்கள். அல்லாஹ் அந்த நன்மையை ஏற்றுக் கொண்டவாறு உமக்கு முஸ்லிமாவதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான் என்று பதிலளித்தார்கள்.

இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அல்லாஹ் சின்னச்சின்ன நன்மைகளையும் வீணாக்க மாட்டான். படைப்பினங்களுடன் அனுதாபம் கொள்வது, நலம் நாடுவது அல்லாஹ்வின் பாதுகாப்பு கிடைப்பதற்கு காரணமாக அமையும் என்பதும் நிரூபணமாகிறது. நாம் நன்மையை உலக நலனுக்காக செய்யக் கூடாது என்ற எண்ணம் வேண்டும். அவ்வாறு இருக்கும்போது அது அல்லாஹ்வின் உரிமையை பாதுகாப்பதற்கு காரணமாக அமையும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆக படைப்பினங்களின் மீது அனுதாபம் கொள்வது எப்படிப்பட்ட விஷயம் என்றால் அதனை மனிதன் விட்டு விட்டால் அதனை விட்டு தூரம் சென்றால் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவன் மிருகமாக ஆகிவிடுவான். மனிதனிடம் மனித இனத்தின் எதிர்பார்ப்பு இதுவே ஆகும். அவன் எப்போது வரை தனது சகோதரருடன் மகிழ்ச்சியுடன், நல்லெண்ணத்துடன், கருணையுடன் நடப்பானோ அப்போதுதான் அவன் மனிதன் ஆவான். இதில் எவ்வித மாற்றமுமில்லை.

சஅதி என்ற கவிஞர் கூறுகிறார்: ஆதமின் சந்ததிகள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரின் உடல் உறுப்பு போன்றவர் ஆவர். நினைவில் கொள்ளுங்கள். அனுதாபத்தின் வட்டம் எனது பார்வையில் மிகவும் விசாலமானதாகும். எந்த சமுதாயத்தையும் எந்த மனிதரையும் அதிலிருந்து தள்ளி வைக்கக் கூடாது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துடன் மட்டுமே அனுதாபம் கொள்ள வேண்டும் என்பது கிடையாது. ஒவ்வொருவருடனும் அனுதாபம் கொள்ள வேண்டும். யாரையும் தள்ளி வைக்கக்கூடாது. நான் இன்றைய அறிவீனர்களைப் போன்று அனுதாபத்தை முஸ்லிம்களுடன் மட்டுமே கொள்ள வேண்டும் என ஒருபோதும் கூற மாட்டேன்.

மாறாக, இறைவனுடைய அனைத்து படைப்பினங்களின் மீதும் அனுதாபம் கொள்ளுங்கள். அவர் இந்துவாக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும் அல்லது வேறொருவராக இருந்தாலும் சரி. நான் அனுதாபத்தை தனது சமுதாயத்துடன் மட்டுமே தொடர்புபடுத்தி கூறக்கூடிய மக்களின் பேச்சை விரும்புவதில்லை. அவர்களில் சிலர் இவ்வாறான சிந்தனையும் கொண்டுள்ளனர்.

அன்னார் சிலரின் எண்ணங்களை எடுத்துரைத்தவாறு ஓர் உதாரணத்தை கூறுகின்றார்கள்: அதாவது சிலர் எவ்வாறு உள்ளனர் என்றால், அவர்களது சிந்தனை எவ்வாறு உள்ளது என்றால் அவர்கள் கூறுகின்றனர்; சீனிபாகில் கையை நுழைத்து பின்னர் அந்த கையை எள்ளு மூட்டையில் நுழைத்து வெளியே எடுத்தால் எந்தளவு எதில் எள் ஒட்டியிருக்குமோ அந்தளவுக்கு மற்றவரை ஏமாற்றலாம் என அவர் தனக்கென்று ஒரு நிலைபாட்டை வகுத்துள்ளனர். அதாவது மற்றவர்கள் பொய் கூறுவதற்கும், ஏமாற்றுவதற்கும் தனக்கென்று ஓர் உதாரணத்தை உருவாக்கியுள்ளனர்.

அதாவது சீனிபாகில் கையை விட்டு எடுத்து அந்த கையை எள்ளில் வைத்தால் எண்ணற்ற எள்ளுக்கள் அதில் ஒட்டிக் கொள்ளும். அந்த அளவுக்கு மற்றவர்களை ஏமாற்றலாம் என அனுமதித்துள்ளனர். ஆக இது இஸ்லாத்தை சீரழித்த மக்களின் நிலையாகும். அல்லாஹ்வின் மாபெரும் கருணையினால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலம் நமக்கு உண்மை இஸ்லாத்தின் பக்கம் வழிகாட்டல் கிடைத்துள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆக இவர்களின் இந்த வீணான கற்பனையான கருத்துக்களினால் மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட அவர்களை விலங்குகளாகவும், மிருகங்களாகவும் ஆக்கி விட்டது. ஆனால் நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். நீங்கள் உங்களது அனுதாபத்தின் வட்டத்தை குறிப்பிட்ட எல்லைக்குள் ஆக்காதீர்கள். அனுதாபம் காட்டுவதற்கு அல்லாஹ் கற்றுக் கொடுத்த போதனையை பின்பற்றுங்கள்.

إِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيْتَائِ ذِي الْقُرْبٰى

அதாவது முதலில் நீங்கள் நன்மை செய்யும்போது நீதியை நிலைநாட்டுங்கள். யார் உங்களுக்கு நன்மை புரிகின்றாரோ அவருடன்

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ் தனது அருளால் தங்களுக்கு வழங்கியதில் கருமித்தனம் செய்பவர்கள், அது தங்களுக்கு நல்லதென்று ஒருபோதும் நினைத்துக் கொள்ள வேண்டாம். மாறாக, அது அவர்களுக்குத் தீயதே. அவர்கள் கருமித்தனம் செய்பவற்றை நிச்சயமாக மறுமை நாளில் அரிகண்டமாக்கி, அவர்களின் கழுத்துக்களில் மாட்டப்படும். வானங்கள் பூமி ஆகியவற்றின் நிரந்தர உரிமை அல்லாஹ்வுக்கே உரியது. மேலும் நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிந்தவனாவான். (3:181)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 31 Oct 2019 Issue No. 44

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நீங்களும் நன்மையுடன் பரிமாறுங்கள். மேலும் இரண்டாவது படித்தரமாகிய அதாவது அதனை விட அதிக நன்மை செய்வது இது பேருபகாரமாகும். பேருபகாரத்தின் தரம் நீதியை விட உயர்ந்தாகும். இது மிகப்பெரிய நன்மையாகும். ஆனால் சில சமயம் இந்த பேருபகாரம் செய்யக்கூடியவர் அதனை சொல்லிக் காட்டக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. ஆகையால் இதனை விட மேலும் ஒரு படித்தரம் உள்ளது. அது மனிதன் தனிப்பட்ட அன்புடன் நன்மை செய்ய வேண்டும். அதாவது நன்மை செய்யும்போது அதில் தனிப்பட்ட அன்பு வெளிப்பட வேண்டும். உபகாரத்தின் எந்தப் பங்கும் அதில் இருக்கக் கூடாது. அதில் எவ்வித வெளிக்காட்டுதலும் இருக்கக் கூடாது. தாய் தனது குழந்தையை வளர்ப்பாள். அவ்வாறு வளர்ப்பதில் எவ்வித நன்மையையும் கருணையையும் எதிர்பார்த்து அவ்வாறு செய்ய மாட்டாள்.

இயல்பிலேயே ஒரு உணர்வு இருக்கும். அதனால் தனது மகிழ்ச்சி, ஓய்வு ஆகியவற்றை தனது பிள்ளைகளுக்காக தியாகம் செய்து விடுவாள். தாயானவள் தனது பிள்ளைக்கு சுயநலமின்றி சேவை செய்வாள். மூன்றாவது தரம், இந்த நன்மையில் நெருங்கிய உறவினரோடு நன்மை செய்வதை போன்று செய்ய வேண்டும். இதற்கான மிகப்பெரிய உதாரணம் பிள்ளைக்கு தாய் செய்யும் சேவையாகும். ஓர் உலக வாதியிடம் இந்த நன்மை உருவாகவே முடியாது. இது பேருபகாரமாக இருக்கும். ஆனால் பேருபகாரம் செய்யக்கூடியவர்களாக இருக்கும்போது பிறகு பேருபகாரத்தை சொல்லிக் காட்டக்கூடியவர்களாக ஆகிவிடுவார்கள். ஏழை நாடுகள் அவர்களின் (பேருபகாரம் செய்யக் கூடியவர்களின்) நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்றால் அல்லது ஏழை நாடுகளில் அரசாங்கங்கள் அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்றால் அவர்கள் அந்த நாடுகளில் ஏழைகளின் முன்னேற்றத்திற்காக துவங்கிய திட்டங்களை நிறைவேற்றவில்லை என்றால் பின்னர் அவர்கள் தனது கையை பின்னால் எடுத்துக் கொள்வார்கள்.

இந்த காரணத்தினால்தான் முஸ்லிம் நாடுகள் குண்டுகளுக்கு இரையாகிக் கொண்டிருக்கிறது. பெரிய இஸ்லாமிய நாடுகளும் கூட இந்த வேலையைத்தான் செய்கின்றன. இதனாலேயே யமன் நாடு குறி வைக்கப்படுகிற. ஓர் மிகப்பெரிய நாடான சவூதி அரேபியாவின் திட்டங்களுக்கு அது முழுமையாக கட்டுப்படவில்லை. அதனால் அவர்களின் ஏழைகளை கொல்லுங்கள். அவர்களின் அப்பாவி குழந்தைகளை கொல்லுங்கள். அவர்களின் பெண்களை கொல்லுங்கள். அவர்களின் முதியவர்களை கொல்லுங்கள். அந்த ஊரில் அமைதியை விரும்பக்கூடிய உள்ளூர்வாசிகளை கொல்லுங்கள் என கட்டளையிடப்படுகிறது.

ஆக இவ்வாறான எண்ணம் இருக்கும் என்றால் பிறகு இறைவன் கிடைக்க மாட்டான். பிறகு இந்த செயல்கள் அல்லாஹ்வின் விருப்பத்திற்காகவும் இருக்காது. அதனால் இறைவனும் கிடைக்க மாட்டான். ஆக அஹ்மதிகள் ஒருபுறம் சுயநலமின்றி சேவை செய்ய வேண்டும். மறுபுறம் அல்லாஹ்விடத்தில் இந்த அநீதியாளர்களின் கைகள் ஒடுக்கப்படுவதற்காக துஆ செய்ய வேண்டும்.

இதற்கு விளக்கமளித்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: இவ்வாறு நன்மை புரிந்து அதனை இயல்பின் அங்கமாக ஆக்க வேண்டும். ஏனென்றால் ஒரு செயல் முன்னேற்றமடைந்தவாறு தனது இயல்பாக மாறும்போது அது முழுமையடைகிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 278–284 – 1985 ஆண்டு இங்கிலாந்து பதிப்பு)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

இதற்கு விளக்கமளித்தவாறு இன்னொரு இடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: இயல்பாகவே மனிதனுக்கு கருணை காட்டுவது ஈதாயிதுல் குர்பாவாகும். இந்த வகையில் இறைவனின் விருப்பமானது நீங்கள் முழுமையான நன்மை புரிபவராக விரும்பினால் தனது நன்மையை ஈதாயிதுல் குர்பா அதாவது இயல்பின் தரம் வரை எட்ட வையுங்கள். எப்போது ஒரு செயல் முன்னேற்றம் அடைந்து தனது இயல்பின் எல்லை வரை செல்லாதோ அப்போது வரை அது முழுமையான அந்தஸ்தை அடையாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 283 அடிக்குறிப்பு – 1985 ஆண்டு இங்கிலாந்து பதிப்பு)

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். இறைவன் நன்மையை மிகவும் விரும்புகின்றான். அவன் தனது படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடக்க வேண்டும் என விரும்புகின்றான். அவன் தீமையை விரும்பியிருந்தால் தீமை செய்யுமாறு வலியுறுத்தியிருப்பான். ஆனால் அல்லாஹ்வின் மகத்துவம் இதனை விட்டும் தூயதாகும்.

அல்லாஹ் நமக்கு வாய்ப்பளிப்பானாக. நாம் உயர்ந்த அந்தஸ்தை பெற்றவாறு அல்லாஹ்வின் விருப்பத்தை பெற்றவாறு நன்மையினை செய்யக் கூடியவர்களாக திகழ்வோமாக. அடியார்களின் உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக ஆவோமாக. மனித இனத்திற்கு தொண்டு செய்யக் கூடியவர்களாக ஆவோமாக. இதன் மூலம் பெருநாளின் உண்மையான மகிழ்ச்சி நமக்கு கிடைக்கட்டுமாக.

தற்போது நாம் துஆ செய்வோம். இதில் நமது ஏழை சகோதரர்களை, தேவைகள் உள்ள, உதவியற்ற சகோதரர்களை நினைவில் கொள்ளுங்கள். சுயநலமின்றி படைப்பினங்களுக்கு செய்ய வேண்டிய உரிமைகளை செய்பவர்களையும் நினைவில் கொள்ளுங்கள். அனைத்து வாக்கிஃபீனே ஸிந்தகீகளையும் துஆவில் நினைவில் கொள்ளுங்கள். ஜமாஅத்திற்கு சேவைகள் செய்யும் நபர்களை அவர்கள் எந்த வகையில் சேவை செய்பவர்களாக இருந்தாலும் சரி அவர்களையும் துஆவில் நினைவில் கொள்ளுங்கள். ஜமாஅத்தின் பணிகளை விசாலப்படுத்துவதற்கு பொருள் தியாகம் செய்பவர்களையும் துஆவில் நினைவில் கொள்ளுங்கள். முஸ்லிம் சமுதாயத்தையும் துஆவில் நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை கொல்வதிலிருந்து அல்லாஹ் அவர்களை தடுப்பானாக.

ரமலான் மாதத்திலும் கூட அவர்கள் குண்டு போட்டுள்ளனர். கடந்த நாட்களில் யமனில் பல குழந்தைகளை அனாதைகளாக்கி விட்டனர். பல பெண்களை விதவைகளாக்கி விட்டனர். பலரை ஊனமாக்கி விட்டனர். எவ்வித பாரபட்சமுமின்றி அநீதியாக பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் போன்றோரை அழித்துள்ளனர்.

அல்லாஹ் அந்த அநீதியாளர்களின் கைகளை தடுப்பானாக. பாகிஸ்தானில் வாழும் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் மீது ஒவ்வொரு நாளும் அநீதியிழைக்கப்படுகிறது. இந்தோநேஷியாவில் வாழும் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். கடந்த சில நாட்களாக சில இடங்களில் அநீதி இழைக்கப்படுகிறது. அரபு நாடுகளில் வாழும் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அரசு சார்பாக அவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தண்டனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அல்லாஹ் ஒவ்வொருவரையும் எதிரிகளின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக. அவர்களுக்கும் பெருநாள் உண்மையான பெருநாளாகட்டுமாக. உண்மையான மகிழ்ச்சிகள் அவர்களுக்கும் கிடைக்கட்டுமாக.

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad